# முரசொலி

வார இதழ்

ஆசிரியர் மு. கருணாநிதி

முரசு 2 | சென்னை | 27—1—56 | வெள்ளி | ஒலி 43


# நவீன நள மகாராஜர்கள்!

நெருப்பின் பொறிகளே! நீங்கள்தான் தேவை; என்று மாநிலச் சீரமைப்பினால் மயங்கிய தோழர்கள் தோள் தட்டிக் கிளம்பி விட்டார்கள்!

ஆட்சி பீடமேறிய 'நீரோ'க்களோ, துப்பாக்கியின் ரவைகளே! நீங்கள்தான் துணை; என்று எதிர் சவால் எழுப்பியிருக்கின்றனர்!

நேருவின் முடிவினால் ஆத்திரமடைந்து, பலாத்காரத்தை நாடியோர், பொதுமக்கள் மட்டுமல்ல; பொது மக்களைப் பொட்டுப் பூச்சியினும் கேவலமாய் நினைத்து, நினைத்துப் பழக்கப்பட்ட அதிகாரச் சீமாட்டியின் நிரந்தர அடிமைகளும் இன்று தேசாபிமானம் பொங்கிட, புலியென மாறியிருக்கின்றனர், தமிழகத்தைத் தவிர்த்த சில பகுதிகளில்!

பம்பாய் 'பாரதப்போர்' நடந்த ரணகளம் போலக் காட்சியளிக்கிறது!

மராட்டிய மண்டலத்து மண்ணுக்கு உரியவர்கள் மீண்டுமொரு 'சிப்பாய் கலகத்'துக்கே துவக்கம் செய்திருக்கின்றனர்!

பி. எஸ். ஹிரே என்னும் ரெவினியூ அமைச்சர்; ஒய். பி. சாவன் என்னும் உள் விவகார அமைச்சர்—இவர்கள் இருவரும் இருபத்தி மூன்றும் தேதியன்று தங்கள் ராஜினாமாவைச் சமர்ப்பித்திருக்கின்றனர்!

பம்பாய் இல்லாத மராட்டியம் இப்படியெல்லாம் வம்பாய் முடிந்திருக்கிறது!

பூனா நகரைச் சேர்ந்த ஐம்பது நகரசபை உறுப்பினர்கள், 'தாய்க்கு விபத்து வந்தும்கூட உமை நத்திக் கிடக்கும் நாய்களல்ல நாங்கள்'-என பதவிக்காரியைக் காரி உமிழ்ந்து விட்டு வெளியேறியிருக்கின்றனர்!

அது மட்டுமா?

இந்த உப கண்டத்தையே ஆச்சரியத்தால் குலுங்கிடச் செய்யும் நிகழ்ச்சியும் நடந்திருக்கிறது!

ஒரிஸ்ஸா மாநிலத்து முதலமைச்சருடைய துணைவியார், திருமதி, மாலதி சௌத்திரி கூட கண்ணீர் வெடிகளுக்குப் பலியாகித் தொல்லைகள் அனுபவித்திருக்கிறார்!

கணவன் தேர்தலில் ஜெயிப்பதற்கு மட்டுமே வீடு வீடாகச் சென்று ஓட்டுப் பிச்சை கேட்டுப் பழக்கப்பட்ட மந்திரிகளின் மனைவிமார்கள் இன்று வீராங்கனை வேடம் பூண்டு, பொது மக்கள் நடத்தும் கிளர்ச்சிகளைப் பார்க்க வேண்டுமென்ற ஆர்வம் அலைமோதுகிற அளவுக்கு இன்று அங்கெல்லாம் நிலைமை வளர்ந்திருக்கிறது!


இதைவிட வியப்பான செய்தி; நிதிமந்திரி தேஷ்முக் தன்னுடைய பதவியைத் துறந்திடத் தயாராகி விட்டாராம், தான் ஒரு ரோஷமுள்ள மராட்டியன் என்ற காரணத்தால்!

கானகத்தில், காதலியைக் காரிருளில் கைவிட்ட நள மகராஜனைப் பற்றி நாம் கேள்விப்பட்டிருக்கிறோம்!

எத்தனையோ வித எண்ணங்கள் அவன் உள்ளத்தை உருக்கிட—ஆசை நினைவுகள் ஆட்டம் போட்டு அவன் முகத்தைக் கருக்கிட-தன்னுடைய நிர்வாணத்தை மறைத்திட, தங்கம் நிகர் தமயந்தி அளித்த புடவைத்தலைப்பை கைகள் அறுத்திட—அந்தக் கணநேரம் மட்டும் கல் நெஞ்சனாய் மாறி, நளனென்னும் நயவஞ்சகன் ஓட்டம் பிடித்தானும்!

வெடித்த கடலமுதை யெடுத்து வடிவு செய்த மேனியாள்—இருண்டமேகஞ்சுற்றியக்கொண்டையாள்—நெஞ்சைச் சூறையாடும் விழிக் கெண்டையாள்—பிறர் அறிவை மயக்கும் மங்கைப் பருவத்தாள்—கரும்பு போல் இனித்து, மருந்து போல் வடித்த சொல்லினாள்-அத்தகைய அரும்

★ தொடர்ச்சி 10-ம் பக்கம்




" காதலியைக் கானகத்தில் காரிருளில் கைவிட்டு......"

# எல்லை விளைத்த தொல்லை!




அன்புள்ள குமார்,

'பாரத நாட்டுக்கிணை 'பாரத நாடே' என்று ஒரு பாடலை நீ அடிக்கடி கேட்டிருப்பாய்; 'பாரத சர்க்காரின்' இன்றைய அரசியல் நடைமுறைகளைக் கவனிக்கும்போது, அந்தப் பாடல் சர்க்காரின் திறமையின்மையை 'சிலேடை'யாக கேலி செய்கிறதோ என்றெண்ணும்படி தோன்றவில்லையா?

சர்க்காரின் தவறுகளை நாம் ஜனநாயக நோக்கோடு சுட்டிக் காட்டும்போதெல்லாம், 'சுதந்திரக் குழந்தைதானே—அனுபவம் போதாது' என்று சில மேலிடத்து சமாதானங்கள், கிளம்புகின்றன. ஆனால் அந்த 'அனுபவம் இல்லாத சிறு குழந்தை' விளைத்துவிடும் விபரீதங்களையும் அது செய்து விடுகிற 'சிறு தவறு' களால் ஏற்படும் குழப்பங்களையும், குத்து வெட்டுகளையும் நாடு அறியும்.

தினம் தினம் நாளேடுகள் சுமந்து வரும் சோகச் செய்திகள், நெஞ்சத்தை உலுக்கும் நாச காரியங்கள், ஒரு கிழமைக்கு மேலாக இந்திய உபகண்டத்தின் பல பகுதிகளிலும் பரவி இருக்கும் அதிர்ச்சி அலைகள் இன்றளவும் ஓய்ந்தபாடில்லை.

மராட்டிய மண்டலத்திலே தட்டப்படும் உரிமை முரசு, இமயத்தின் பனிப்பாறைகளில் மோதி எதிரொலிக்கிறது.

ஒரிசாவிலும்-பீகாரிலும் ஆர்ப்பாட்டம், அமளி! பம்பாயிலே தடியடி, துப்பாக்கி முழக்கம், பிணம், ரத்த வெள்ளம்! பாட்னாவிலே கோரக்கூத்து! 'மராட்டியம் மாவீரன் சித்தரித்த மண்டலம்' இதை விட்டுக் கொடுக்க மாட்டோம், என்று மார்தட்டி முழக்கமிடுகின்றனர் காட்கில், சங்கரராவ் தேவ் போன்றவர்கள்!

பம்பாயில் மட்டும் 60 முறை போலீஸ் சுட்டிருக்கிறதாம்; ஏகாதிபத்திய வெறியர்கள் என்று தேசியத் தோழர்களால் குற்றம் சாட்டப்பட்ட வெள்ளைக்காரர்கள் ஆண்ட பொழுது கூட இத்தகைய கொடூரச் செயல் நடைபெறவில்லை குமார். பாரத சர்க்காரிலேதான் மக்களை நோக்கி 60 முறை துப்பாக்கி முனைகளைத் திருப்பி இருக்கின்றனர் துரைத்தனத்தார்.

ஐந்து காங்கிரஸ் எம். எல். ஏ.க்கள் கூட, நேரு பண்டிதருக்குக் கண்டனக் கடிதம் எழுதியுள்ளனராம்!

800 அதிகாரிகள் தலைமையில் 12,000 போலீஸ்காரர்கள், பம்பாய் நகர வீதிகளிலே சுற்றிக்கொண்டிருக்கும் பொழுதே பயங்கர நாச காரியங்கள் நடைபெற்றிருக்கின்றன.

போலீஸ் ஸ்டேஷன்களுக்கு எதிரிலேயே கத்திக் குத்தும், கோரக் கொலைகளும் நடந்திருக்கின்றன.

மத்திய சர்க்காரின் நியாய மற்ற முடிவால், எத்தகைய அழிவுகள்-எவ்வளவு நஷ்டம்-உயிர்ச் சேதம் ஏற்பட்டிருக்கிறது பார்த்தாயா?

அரசாங்கத்தின் அலட்சிய மனப்பான்மையும்—நேரு பண்டிதரின் ஏதேச்சாதிகாரப் போக்கும் மக்களிடையே இத்தகைய வெறியுணர்ச்சியையும், ஆத்திரத்தையும் உண்டாக்கி இருக்கிறது.

60 முறை துப்பாக்கிப் பிரயோகம்! ஆங்கிலேயன் ஆட்சி இருந்தபோது கூட கேள்விப்படவில்லை நாம்!

பிறகு ஏன் பாட மாட்டார்கள் 'பாரத நாட்டுக்கிணை பாரதநாடே' என்று, குமார்! மத்திய சர்க்காரிடமிருந்து நியாயம் கிடைக்கும் என்று நம்பிக் கிடந்த தமிழர்களையும் திடுக்கிடச் செய்திருக்கிறது பண்டித நேருவின் முடிவு; பீர்மேடு—தேவிகுளம், நெய்யாற்றங்கரை, செங்கோட்டை, முதலிய பகுதிகள், பறி போகின்ற நிலை கண்டு கொதிப்படைந்திருக்கிறார்கள் தமிழர்கள்.

தமிழகத்துடன் நியாயமாக இணைக்கப்பட வேண்டிய பகுதிகள் மலையாளத்துடன் இணைத்துவிட்ட கொடுமையைக் குறித்து தமிழகம் துடிக்கிறது.

தினவெடுத்த தோள்களில் தமிழ் வீரம் பாய, தீட்டிய கூர் வாட்களென களம் நோக்கி முகம் திருப்புகிறது மாணவர் பட்டாளம்!

வீடெல்லாம் — வீரர்தம் விழியெலாம் உரிமை பறி போவதைக் குறித்து அனல் கிளம்புகிறது!

பொருதடக்கை வாள் தூக்கி பொங்கும் மணி மார்பிலே கவசம் பூண்டு, களச்சண்டை நடத்தும் காலமல்ல இது!

என்றாலும் துரைத்தனத்தாரின் தோட்டாக்களை மார்பிலே தாங்கி, கோவெனக்கதறி செத்து மடியும் சோகக் காட்சிகளை நாளேடுகள் நமக்குப் படம் பிடித்துக் காட்டுகின்றன.

இத்தனை கொடுமைகளும் அவர்கள் குறிப்பிடுவது போல, 'அனுபவமில்லாத சிறு குழந்தையின்' கவனக் குறைவால் நிகழ்ந்து விட்டது என்று கூறினால் அறிவுலகம் சிரிக்காதா?

'அனுபவமில்லாத 'யுவராஜா' வைத் தற்காலிகமாகவாவது அரசு கட்டிலிலிருந்து இறக்கி வைக்க வேண்டுமே' என்றுதானே அரசியல் அறிந்தோர் கூறுவர்.

ஆனால் குமார், சர்க்காரின் 'சிம்மாசனத்தை' பறிக்க வேண்டுமென்று நாம் கூறவில்லை.

கொலு வீற்றிருக்கும் கோமான்கள் தங்கள் கவனக் குறைவாலும் சர்வாதிகாரப் போக்காலும் நாட்டில் ஏற்படும் கொந்தளிப்பை உணர்ந்து கொண்டு நேர்மை வழி நடக்க முன் வாராது எத்தகைய அறிவீனம் என்பதைக் குறிப்பிடத் தேவையில்லை!

ஒரு நேருவின் உதட்டசைவிற்கும், உருட்டுப் பார்வைக்கும் தான் இந்திய சர்க்கார் இயங்கி வருகிறதென்றால் இதை ஜன நாயக சர்க்கார் என்று எப்படி ஒப்புக் கொள்வது!

'நேருவே கூறி விட்டார், இதை எப்படி மறுப்பது? அவர் முடிவை ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும்' என்று 'பக்தவத்சலங்கள்' வேண்டுமானால் ஆமை போல் அடங்கி பதவி போதையிலே சிந்தனையை அடகு வைத்து வாழலாம்!

ஆனால் மாநில புது அமைப்பால் தேவிகுளம், பீர்மேடு, செங்கோட்டை முதலிய பகுதிகளை இழக்க தமிழர்களின் நேர்மையுள்ளம் சம்மதிக்காது. தமிழர்களின் பொறுமையை சோதிக்கும் டில்லியின் முடிவை ஏற்க மாட்டோம் என்பதை இன்று தமிழகத்திலே கிளம்பியிருக்கும் கண்டனக் குரல்கள் முழக்கமிடுகின்றன.

இந்திய அரசு, மாநிலக் குழுவினரின் சிபார்சுகளை பெருவாரியாக ஏற்றுக் கொண்டதாலும் பண்டித நேருவின் சர்வாதிகாரச் சாயல் படிந்த முடிவாலும், நாட்டின் பல பகுதிகளிலும் ஏற்பட்டுள்ள கொந்தளிப்பை, உரிமை உணர்ச்சியை பெரும்பாலான ஏடுகள் சுட்டிக்காட்டியும் இன்றளவும் ஆட்சியாளர்களிடம் மாற்றத்தைக் காணோம்.

நாடெங்கும் குழப்பம்! கொந்தளிப்பு! ரயில்கள் நிறுத்தப் பட்டன! அஞ்சலகங்கள் தீயிடப்பட்டன! கட்டிடங்கள் அழிந்தன! கற்கள் வீசப்பட்டன! டிராம்கள் கொளுத்தப் பட்டன! நெசவாலைகள் மூடப்பட்டன! ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்தனர்! மாணவர்கள் முழக்கமிட்டபடி ஊர்வலம் செல்கின்றனர்! கதவடைப்பு! கடையடைப்பு! கல்லூரிகள் மூடப்பட்டன!

எரி பொருள்களை அடுக்கி வைத்து வீதிகளிலே தீயிட்டனர்! போலீஸ் நிலையங்கள் சுட்டெரிக்கப்பட்டன!

பலர் கைது, குத்து வெட்டு, கொள்ளை, கூக்குரல், கண்ணீர். துப்பாக்கிக்கு இறையாகி ரத்த வெள்ளத்திலே மிதப்போர்! இப்படி நெஞ்சு திடுக்கிடும் நெருப்புச் செய்திகள், பம்பாய், பாட்னா, பீகார் முதலிய பகுதிகளில் இருந்து வந்து கொண்டிருக்கின்றன,

சீரமைக்க வந்த குழு சீரழிந்த காட்சிகளை உண்டாக்கிஇருக்கிறது

ஒரு நேருவின் முடிவு இத்தகைய நாச காரியங்களை விளைத்திருக்கிறது!

அனல் பொங்கும் விழிகளோடு அணிவகுத்து நிற்கிறது தமிழகத்து மறவர் கூட்டம்!

என்ன சமாதானம் சொல்லப் போகிறது டில்லி பீடம்?

நீரோவையும் — இட்லரையும் மண்டியிடச் செய்த 'மனிதருள் மாணிக்கத்தின்' புகழ் ஒளி, மக்கள் தம் இதயங்களிலிருந்து கிளம்பி இருக்கும் தீ ஜுவாலையில் மங்கி விடாமல் இருக்குமா? அந்த முடிவை நாம் அறிந்து கொள்ளும் நாள் அதோ! கொஞ்சம் பொறு!

அன்புள்ள,

**பொன்முடி.**

---

## திராவிட முன்னேற்றக் கழகப்

# பொதுக்குழு

**29—1—1956 ஞாயிறன்று காலை 10 மணிக்கு**

## சிதம்பரம் 'நாடார் சத்திரத்'தில்

நடைபெறும்.

ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படும் பொருள்கள்:

1. மாநில மாநாடு
2. கழகச் சட்ட திட்டம் திருத்தம் செய்தல்.
3. கொள்கை விளக்க நூல் வெளியிடுதல்.
4. மாநிலப் புது அமைப்புப்பற்றி முடிவெடுத்தல்.

—தி. மு. க. தலைமை நிலையம்.

# தலையங்கம்

காதலிலே கவிதையிலே களம் போதும் பேச்சு;
கணவனுக்கும் மனைவிக்கும் திராவிடமே மூச்சு!

சென்னை 27-1-56 வெள்ளி

## முரசு கொட்டுவோம்!

வெளியே பழமுதிர்ச் சோலைகள்; பனிவெளிப் பிராந்தியங்கள்; கற்பாறைகள்! உள்ளே மாற்றுக் குறையாத் தங்கக் கட்டிகள்; தரம் குறையா நவரதன மணிகள்!—இத்தகைய மாமலைதான் தி. மு. கழகம்!

கனியினும் சுவைமிக்கக் கொள்கைகளை மக்கள் மன்றத்திலே வைர நெஞ்சுடன் பரிமாறிக் கொண்டிருக்கும் நம்மை எங்கோ இருக்கும் தலைமைப் பீடத்து ஆணைகளுக்கு அடிபணிந்து—ஆக்ஞையைத் தலைமேற் சுமந்து ஆடிஒடி வேலை செய்யும் இயந்திர அமைபபிற்கு ஒப்பிட முடியாது!

நாம் நமக்கென ஒரு கொள்கை கண்ட உயிருள்ள இயக்கம்—

பனி போல இருக்குது நம் இலட்சியம் என்போர்—அது பதவிக் கதிரவனுக்கோ, பணக் கதிர் வீசுவோனுக்கோ அடிமையாவதில்லை என்பதை உணர்ந்துவிட்டனர்!

யாராலும் பிளக்க முடியாத பாறையென்போர் அதனுள்ளே விடுதலைத் தாய் அணிவதற்கு எடுப்பான மணிகள் கருவிருப்பதைக் காணுகின்றனர்!

இமயம் போல் இருக்கிறோம்—இருந்தாலும் நமது 'எவரெஸ்ட் முனை'களை அளந்து நமது உயரத்தைத் தெரிந்து கொள்ள வேண்டாமா?

ஜனநாயக அமைப்பானதால் நமக்கு அந்த அளவு கோலும் கிடைத்திருக்கிறது, பொதுக்குழு என்ற பெயரில்!

தென்னகத்து வரலாற்றினை மாற்றி எழுதுவதற்கென்று எழுத்தாணியைத் தீட்டிக் கொண்டிருக்கும் திராவிட முன்னேற்றக் கழகம் தன்னுடைய இரண்டாவது பொதுக்குழுவினை வருகிற 29-1-56 ஞாயிறு காலை பத்து மணிக்கு சிதம்பரத்திலே கூட்டவிருக்கிறது.

செந்தமிழ் நாட்டுப் பகுதிகளைச் சிதைத்து, டெல்லி ஆதிபத்யக்காரர்கள் காட்டு ராஜா தர்பார் நடத்திக் கொண்டிருக்கும் நேரம்! நெஞ்சு வெடித்தத் தமிழர் துஞ்சுபுலியாய் இருப்பதினும் இறப்பதே மேலென்று முடிவெடுக்கத் துடிக்கும் தருணம்—

பம்பாய் போன்ற நகரங்களோ நெருப்புப் பிழம்பாய் மாறினாலன்றி நேருவின் முடிவை மாற்றியமைக்க முடியாதென்று தங்கள் செய்கை மூலம் தெளிவுபட அறிவித்துக் கொண்டிருக்கின்றன.

—இந்தப் பின்னணியில்தான் நாம் தில்லையிலே கூடுகிறோம்!

டெல்லி சென்று திரும்பியிருக்கும் காமராசர் குழிதோண்டிப் புதைக்கப்பட்ட 'தட்சிணப் பிரதேச'மெனும் பிரேதத்தை எடுத்து வைத்துக் கொண்டு ஒப்பாரி படிக்க ஆரம்பித்திருக்கிறார்!

அன்பர் ஆச்சாரியாரோ மேற்கு வங்கமும், பீகாரும் இணைந்து விட்டது; இனி தெற்குப் பகுதியும் ஒன்றாக இணைய வேண்டியது தானே என்று அலறத் துவங்கி யிருக்கிறார்!

நடமாடும் பிரேதமாம் தட்சிணப் பிரதேசத்துக்கு மரண அடி கொடுக்க வேண்டும்; நம்மை நடமாடும் பிரேதமாக்கி விட்ட எல்லை மாற்றங்களுக்குத் தக்கதோர் முடிவு வகுத்து, இழந்த பகுதிகளிலே உரிமை முரசம் தட்ட வேண்டும்.

இந்தத் தலையாய இலட்சியத்துக்காக, தமிழகத்தின் பொதுவான பிரச்னைக்கு எல்லோரும் இணைந்த கிளர்ச்சி பலனளிக்குமே என்ற பெரு நோக்கம் கொண்ட தோழர்கள், மா. பொ. சி., மு. வரதராசன், சுப்பையா போன்றோர் அறிஞர் அண்ணா அவர்களைக் கலந்தாலோசனை நடத்தி யுள்ளார்கள்.

சென்ற 21-ம் தேதியன்று, இழந்த பிராந்தியங்களை மீட்க சர்வ கட்சி முன்னணி வேண்டுமென விரும்பும் முன் ஆலோசனைக் கூட்டத்தில் அறிஞர் அண்ணா அவர்களும், பொதுச் செயலாளர் நெடுஞ்செழியன் அவர்களும் கலந்து கொண்டிருக்கின்றனர். இத்தக் கூட்டத்தில் தோழர்கள் ம பொ. சி., எல். எஸ். கரையாளர், எப். ஆர். வெங்கட்ராமன்; ப. ஜீவானந்தம்; எஸ். பி. ஆதித்தன்; பிளேசசர் ஆகியோரும் கலந்து கொண்டனராம்.

இது தவிர ஒன்றுபட்ட தமிழகத்தின் போர்ப்பரணி டெல்லியின் காதுகளைக் கிழிக்க வேண்டு மென்பதற்காக 27—1—56 அன்று சர்வகட்சி ஆலோசனை மாநாடு ஒன்று கூட்டுவதற்கான முயற்சிக்கு நமது பொதுச் செயலாளர் ஆதரவு நல்கி யிருப்பதாகவும் 'அறிவகத்'துச் செய்தி யொன்று கூறுகிறது.

தேவிகுளம்-பீர்மேடு பிரச்னை குறித்து பொதுச் செயலாளர் ஓர் ஆய்வுரைக் கேள்வித்தாள் தயாரித்தனுப்பி, கழக முன்னணி வீரர்களின் கருத்துக்களைத் தெரிந்து கொண்டிருக்கிறார்.

—இதற்குப் பிறகு பொதுக்குழு ஏற்றதொரு முடிவை—நிலம் மீட்கும் நல்ல முடிவை — நாட்டவர் முன்னிலையில் அறிவிக்கப் போகிறது.

அடுத்துவரும் மாநில மாநாடு நம் சிந்தை மணக்க வரும் பூக்காடாகப் பொலியவும் தில்லையில் கூடும் பொதுக் குழுவினர்தான் தகுந்த முறைகளைக் காணப் போகின்றனர்.

நாடு பெறும் பாதையில் நல்லதொருதிருப்பம் காணவும், இலட்சியம் கைகூடும் திசையை திறனறிந் துணர்த்தும் கைகாட்டிகளாகவுமே நமக்கு மாநாடுகள் பயன்தந்திருக்கின்றன!

அணுவை ஆகாயமாகக் காட்டும் பூதக்கண்ணாடியல்ல மாநில மாநாடு! அப்படி நினைத்து நம்மை நாமே ஏமாற்றிக் கொள்பவர்களுமல்ல நாம்!

படை வீரர் பட்டியல் தயாரித்து, நெஞ்சுரமூட்டும், பாடிவீடு அது!

அத்தகைய 'திருச்சி' பற்றியும் 'தில்லை', திட்டங்களைத் தீட்டப் போகிறது!

அதற்கான ஆக்கமும் ஊக்கமும்தந்து ரணபேரிகை தட்டுவோம்! இமயத்தை முட்டுவோம்!—என்ற வகையில் 'தில்லை' அமைய எம் வாழ்த்துக்களை முன் வைக்கின்றோம்!

★ ★ ★

## முக்கிய அறிவிப்பு.

கூட்டங்களில் கலந்து கொள்ள வேண்டுமென்று தோழர்கள் கடித மூலமும், நேரிலும் வற்புறுத்தி வருகிறார்கள். அதன் காரணமாகவே, டாக்டரின் எச்சரிக்கையையும் மீறி நான்கைந்து மாதங்களாக அதிகக் கூட்டங்களில் கலந்துகொண்டதின் பயனாக, மீண்டும் உடல்நிலை பாதிக்கப் பட்டுவிட்டது. ஒரு கூட்டத்தில் பேசினாலே மறுநாள் அதன விளைவாக டாக்டரிடம் செல்ல வேண்டியிருக்கிறது. வெளியூர்த் தோழர்கள் பணம் செலவு செய்து, கூட்ட ஏற்பாடுகளை பிரமாதமாகச் செய்து அழைத்து, அதைத் தட்ட முடியாமற் சென்றால் அங்கே சில நிமிஷ நேரம் மட்டுமே பேசி முடித்து விடுவதென்பது கூடியிருக்கும் மக்களை ஏமாற்றத்திற் காளாக்குவதாக முடிகிறது. அதனாலேயே, இப்போது ஒத்துக்கொண்ட கடலூர், மாயவரம் கூட்டங்களை முன் கூட்டியே கடிதம் எழுதி ரத்து செய்யக் கூடிய நிலைக்கு ஆளாகிவிட்டேன்.

**ஒரு கூட்டத்திற்கும் மறு கூட்டத்திற்கும் இடை நாட்கள் அதிகமாக இருந்து, அந்தக் கூட்டமும் அரை மணி நேரத்திற்குக் குறைவாகவே பேசக் கூடிய நிகழ்ச்சியாக இருந்தால் தான் அதில் கலந்து கொள்வது என்ற முடிவிலிருக்கிறேன். இதுவும் என் முடிவுதான்.** டாக்டரின் முடிவோ கூட்டங்களிலேயே அறவே பேசக் கூடாது என்பதுதான்! டாக்டரின் எச்சரிக்கை வார்த்தைகளை விவரித்து தோழர்களை யெல்லாம் பயமுறுத்த நான் விரும்பவில்லை. இருதயமுள்ளவர்களுக்கு இந்த விளக்கமே போதும். இரண்டொரு ஆண்டுகள் வரையில் குறைவாகப் பேசி நிறைய எழுதி, அதைவிட அதிகமாகச் செயல்புரிந்து இயக்கப் பணியாற்றும் நிலைமைக்கு என்னை அனுமதிக்குமாறு தோழர்களைத் தாழ்மையோடு வேண்டுகிறேன்! அதிக நாள் இருந்து தொண்டாற்றி—என்; திராவிடநாடு கிடைக்கும் வரையிலாவது வாழவேண்டும் என்ற ஆசையால்!

அன்பன்,

மு. கருணாநிதி

# விஷ நாக்கு அது; விலகி நட!

"செடிக்கு இலை எப்படி அவசியமோ அது போலவே நல்லவர்களாக இருக்க மக்களுக்கு ஆஸ்திகம் அவசியம்."

'நாம் நல்லவர்களாக இருக்க, பழைய ஆசாரம், சாஸ்திரம், புராணம், ஆகியவற்றை அறிந்து அதன்படி நடக்க வேண்டும்.'

'விஞ்ஞானிகள் கூட முன்னால் அறிந்து கூறப்பட்ட உண்மைகளை ஒப்புக் கொண்டே மேற்கொண்டு முன்னேற முயல்கிறார்கள். பழையன வெல்லாம் வேண்டாம் என்று தள்ளி விடுவது கிடையாது'

'உலகில் எல்லா நாடுகளிலும் பல்லாயிரக் கணக்கான ஆண்டுகளாக சாஸ்திரங்களை ஆராய்ந்து கண்டு பிடித்திருக்கின்றனர். இதை யோசிக்க வேண்டும். மக்கள் நல்லவர்களாக இருக்க வேண்டுமென்பதற்காக சாஸ்திரங்களை பெரியவர்கள் எழுதி வைத்திருக்கிறார்கள்.'

'ஆகவே உலகெங்கும் மக்கள் ஆஸ்திகர்களாகவே இருந்து வருகிறார்கள்: அதற்கு எதிரிடையாக நாஸ்திகம் பேசுபவர்கள் மிகச் சிலரே.'

'செடிகளுக்கு மத்தியிலே ஆடுகளை போலவே, ஆஸ்திகர்களுக்கு மத்தியில் நாஸ்திகர்கள்'

'உலகின் எல்லா நாடுகளிலும் படித்தவர்கள் ஆஸ்திகத்தை ஒப்புக் கொள்ளுகின்றனர்.'

'எல்லாவற்றையும் நாமே அறிந்துணர முடியும் என்று நினைப்பது முட்டாள்தனமாகும்'

'ஆகவே பதினாயிரக் கணக்கான ஆண்டுகளாக பெரியோர்கள் வகுத்திருக்கும் சன்மார்க்கத்தை உடைக்க வேண்டாம்: அணை கட்டுவது சிரமம்: உடைப்பது எளிது'

"சாஸ்திரம், ஆசாரம், முதலியவற்றை மூடநம்பிக்கை என்று சிலர் கூறுகிறார்கள்: மூட நம்பிக்கையால் மனிதர்கள் மூடர்களாகி விடுவதில்லை"

"பெரியவர்கள் சொன்னதெல்லாம் அவிவேகமாகாது"

★

மேலே தரப்பட்டிருக்கும் வாசகங்கள் பல முறை கேட்டுக் கேட்டு அலுத்துப்போன வாசகங்களைப் போல் தோன்றவில்லையா?

புரசைவாக்கத்தில் விவேக மார்க சங்கத்தைத் துவக்கி வைத்து 'மாம்பலத்து மகான்' பேருரை ஆற்றும்போது உதிர்ந்த பொருக்கு மணிகள்தான் இந்த வாசகங்கள்!

"தங்களை மேதாவிகள் என்று கருதிக் கொள்ளும் பழங்கால வழக்கமுள்ள அரசியல் தலைவர்கள் இன்றளவும் தங்கள் போக்கை மாற்றிக் கொள்ளாமல் இருக்கிறார்கள்"

திரு—கொச்சி சர்க்கார் அதிகாரிகள் கூட்டத்தில் பேசும் போது கே. எம். முன்ஷியவர்கள் இப்படியொரு வாசகத்தைக் குறிப்பிட்டார்.

ஆச்சாரியாரின், பேச்சுக்களையும், இன்றைய நடை முறைகளையும் கவனிக்கும்போது, முன்ஷி குறிப்பிட்ட அந்த வாசகங்கள் தான் நினைவிற்கு வருகின்றன.

ஆச்சாரியார் தன்னைத் தானே 'மேதை' நிலையில் உயர்த்திக் கொண்டு உதிர்த்து வரும் 'மணி வாசகங்கள்' எத்தகைய பத்தாம் பசலிக் கொள்கைகளுக்கு ஆலவட்டம் வீசுவனவாக இருக்கிறது என்பதை அறிவுடையோர் உணர முடியும்.

"புத்தனும், அசோகனும், ஏசுவும், மற்ற மகான்களும், யாரைக் கேட்டுக் கொண்டு காரியம் செய்தார்கள். நானும் அப்படித்தான்!" என்று திமிர்வாதம் பேசும் இந்த ஆரியகுலக் காவலர் தன்னை ஓர் மகானென்றும், தன் வாக்கு ஒவ்வொன்றும் 'வேத வாக்கு' என்றும் மக்கள் ஒப்புக் கொள்ள வேண்டும் என்ற தோரணையிலும் தான், அவர் தற்கால 'அஸ்தமனப்' போக்கு இருந்து வருகிறது என்பதை நாடு அறியும்.

என்றாலும் விழிப்புணர்ச்சி பெற்றுள்ள சமுதாயத்தில் அவர் பரப்பி வரும் வேண்டாத கருத்துக்கள் வளரும் புது சமுதாயத்தைத் தடை செய்து விடும் என்று நாம் கவலைப்படவில்லை: மாறாக, மக்களிடையே, எடுபட முடியாத, காலத்திற்கு ஏற்காத—பட்டுப் போன கருத்துக்கள், என்பதை உணராமல் குருட்டு வழியில் நடக்கும்படி, உபதேசிப்பது சமுதாய விரோதமான செயல் என்பதை சுட்டிக்காட்ட கடமைப் பட்டிருக்கிறோம்.

வயது வளர வளர பெரியவர்களிடத்தும், குழந்தைப் பண்பு தலைகாட்டும் என்பார்களே அதற்கேற்ப ஆச்சாரியாரின் பேச்சுக்களிலும், ஒன்றிற்கு ஒன்று முரண்பட்ட, தவறான உவமைகளும் பொருந்தாத — குழந்தை வாதங்களும்தான், தலைகாட்டுகின்றன!

குழந்தை வாதம் என்றாலும் பேச்சிலே, தூய்மை கலந்திருக்கும். ஆனால் இந்த 'வளர்ந்த குழந்தையின்' வாதங்களில், தீய கருத்துக்களும் பழைய வர்ணாஸ்ரம சாயல்படிந்த விஷ நினைப்புகளும், தான்வரிக்கு வரி நிழலாடுகின்றன.

"செடிக்கு இலை எப்படி அவசியமோ அதைப் போல மக்களுக்கு ஆஸ்திகம் அவசியம்"

எத்தகைய அரிய 'ஞானோதயம்' பார்த்தீர்களா? எத்தனை இரவுகள், தூக்கத்தை மறந்துவிட்டு சிந்தனையில் வடித்தெடுத்த தத்துவமோ, நமக்குத் தெரியாது!

இலைகள் இல்லையென்றால் செடி கொடிகள் வாழ முடியாது! உண்மை!

ஆனால், ஆஸ்திகத்தை ஒப்புக் கொள்ளாத [ஆச்சாரியார் வாதப்படி இலைகள் இல்லாத] நாஸ்திகர்கள் வாழ்கிறார்களே!

இப்படி பொருந்தாத உவமைகள் தருவதும், சென்ற போக்கில், பேசுவதும், ஆச்சாரியாரின் சுபாவம்!

'நாம் நல்லவர்களாக இருக்க வேண்டுமென்றால், பழைய ஆசாரம், சாஸ்திரம், புராணம், ஆகிய வற்றை அறிந்து அதன்படி நடக்க வேண்டும்'

ஆச்சாரியாரின் கூற்றுப்படி, சாஸ்திரம், சம்பிரதாயம், புராணம் போன்றவைகள், மனித சமுதாயத்தை ஒழுக்கப் பாதையில் கொண்டு செல்லுகின்றனவா? ஆயிரமாயிரம் ஆண்டுகளாக நாட்டிலே மக்களுக்கு, நல்லறிவை புகட்டுவதற்கென உண்டாக்கப்பட்ட, இந்த ஆச்சாரியாரின் 'ஆயுதங்கள்' இன்றளவும் மக்களுக்கு செய்துள்ள நன்மைகள் என்ன?

இவர் கூறும், மதமும், சாஸ்திரமும், புராணங்களும், எத்தனை பேரை புனிதர்களாக மாற்றிஇருக்கிறது?

எத்தனை பேருக்கு—அறி ஒளியைத் தந்திருக்கிறது?

நெடுங்காலமாக நாட்டு மக்களிடையே உலவிக் கொண்டிருந்த சாஸ்திரமும் சம்பிரதாயமும், குருட்டு நம்பிக்கையும், எத்தனை பேரை ஒழுக்க நெறியில் திருப்பி-நேரிய பாதையில் நடை பழக விட்டிருக்கிறது. சாஸ்திர சம்ரதாயங்களின் பேராலும், ஆஸ்திகத்தின் பேராலும், நடைபெற்ற கொடுமைகள்—கொள்ளைகள், ஒழுங்கீனங்கள், அறிவுள்ளோர் நினைத்திடக் கூசும் ஆபாச வெறியாட்டங்கள் எத்தனை, எத்தனை!

நாஸ்திகவாதம் தலைதூக்காத காலத்தில்—உலவிய கொடியவர்களுக்கும்—பழிக்கஞ்சா கொலைகாரர்களுக்கும் யார் காரணம்?

மனைவியை மாற்றான் மஞ்சத்திற்கு அனுப்பி வைத்த மானங்கெட்ட இயற்பகை!

தாயையும் தளிர்களையும், வெட்டிக் குவித்த கோட்புலி!

குழந்தையைக் கொலை செய்த சிறுத் தொண்டன்!

தாயைக் கூட, தந்தையைக் கொன்று போட்ட கொடிய பார்ப்பனன்!

ஐந்து—ஏழு-பத்து! என்ற விகிதத்தில் ஆடவர்களை வேட்டையாடிய துரோபதை போன்ற கண் வெட்டுக்காரர்கள்!

கன்னியர்களை கற்பழிக்கப் புறப்பட்ட, காவியுடைக் காதகர்கள்!
மான் இறைச்சியையும், மதுக்குடங்களையும், உருட்டிக் கொண்டு மயில் ஒத்த மங்கையரின் மோகத்தட்டிலே புரண்டபடி இகத்திற்கும் பரத்திற்கும், பாலம் அமைத்துச் கொண்டிருந்த பஞ்சாங்கமேந்திகள்!

பர்ணசாலைகளிலே, பளிங்குச் சிலை யொத்த கட்டழகிகளுடன் 'ஞானம்' தேடிக் கொண்டிருந்த துறவிகள்!

வழிப்பறி கொள்ளையடித்து வாழ்ந்த திருமங்கையாழ்வார்கள்:
தாசி லோலர்களாகத் திரிந்த சாம்பல் பூசிகள்! இவர்களின் ஒழுங்கீனத்திற்கும் ஆபாச நடத்தைகளுக்கும் யார் காரணம்? நாஸ்திகமா? ஆரியகுலத்தின் காவலராம் ஆச்சாரியார் இதற்கு பதில் கூறுவாரா?

இத்தனையும், ஆன்றோர் காட்டிய வழியில் நடப்பதாகவும், சாஸ்திரம் கூறும் சன்மார்க்கத்தை கடை பிடிப்பதாகவும், கூறிக் கொண்டு உலவியர்கள் செய்த ஆபாசங்கள்தானே!

சன்மார்க்கத்திலிருந்தும், சீலத்திலிருந்தும் ஆச்சாரியார் கூறும், சாஸ்திரமும், சம்பிரதாயமும் புராணங்களும், அவர்கள் பாதை தவறிய போது, காப்பாற்றாமல் போனது ஏன்?

அக்காலத்தில் கொழுந்து விட்டெரிந்த 'ஆஸ்திகம்' அப்போது என்ன செய்து கொண்டிருந்தது?

★

இந்நாட்டுப் புராணங்களை அறிவுடையோர் நெருங்க முடிகிறதா? அருகில் நெருங்க முடியாதபடி அவைகளிலிருந்து 'கூவத்து வாடை' தானே வீசுகிறது:

ஏமாந்த முனிவர்களின் மனைவியரைக் கற்பழித்து உலவிய முப்பெருங் கடவுள்கள்!

பெண்களை நிர்வாணமாக்கி, அந்த 'குளோசப்' காட்சியை அணு அணுவாக ரசித்து மகிழ்ந்த தேவர் தலைவர்கள்!

★ தொடர்ச்சி 10-ம் பக்கம்


## தேவிகுளம், பீர்மேடு பற்றி பொதுக்குழுவின் முடிவு

**30—1—56 திங்கள் மாலை 5-மணிக்கு**


**திருவல்லிக்கேணி கடற்கரையில்**

நடைபெறும்.

அறிஞர் அண்ணா, இரா. நெடுஞ்செழியன்,
என். வி. நடராசன், மு. கருணாநிதி, ஈ. வி. கே. சம்பத்,
சி. பி. சிற்றரசு, கே. ஏ. மதியழகன்
ஆகியோர் பேசுவர்.

-சென்னை மாவட்ட தி. மு. க.

# பெரிய இடத்துப் பெண்கள்!



எப்போதும் தொடர்ந்து வரும் நிழல் இருட்டிலே தெரிவதில்லை; ஆனால் நேருவைத் தொடரும் இந்திரா காந்தியாரோ நிழலையும் தோற்கடித்துவிட்டார், தந்தையின் அருகில் இருப்பதிலே!

சாதாரண பிறப்பு விழா முதற்கொண்டு சோவியத் விஜயம் வரை தந்தை — மகள் என்ற உறவை அவர்கள் அறுத்துக் கொள்ள விரும்பவில்லை!

சிலர் வியப்படைகின்றனர், எந்த நாட்டிலும் காணாத காட்சியாக இருக்கிறதே என்று!

கணவனுக்குப் பணி புரிவதையே பாரதப் பெண்களின் பண்பென உணர்ந்தோர்—இந்திராவுக்கு மாலையிட்ட பெரோஷ் காந்தியைப் பற்றிப் பரிதாபப்படுகின்றனர்! தாலி கட்டியவன் பெருநோயால் வாடியபோதிலும், அவன் போக விரும்பிய இடம் தாசி வீடு என்று தெரிந்தும். அவனைத் தோளிலே சுமந்து சென்ற சுமங்கிலி நளாயினி எங்கே?—இந்திரா எங்கே? என்று கேள்வி கேட்டு மூக்கிலே விரல் வைக்கின்றனர்.

விவரம் தெரியாத பாமர மக்கள் மேல்நாட்டுப் பிரதமர்கள் கூட இப்படித்தான் புதல்விகளைக் கூட அழைத்துச் செல்வரோ-என்று எண்ணிக்கொண்டிருக்கின்றனர்.

ஆனால் சில மாதங்களுக்கு முன்னர் இங்கே பவனி வந்த ரஷ்ய நாட்டுப் புல்கானின் இங்கே தனியாளாகத்தான் வந்திருந்தார்.

குருஷேவ் கூட அவரது திருக்குமாரியார் வரவில்லை.

அவர்களுக்காக தினம் தினம் இமயத்தைத் தாண்டி பறந்து வந்த ஆகாய விமானம் வேண்டுமானால் அவரது அருமந்த புத்திரி எழுதிய கடிதக் கட்டுகளைச் சுமந்து வந்திருக்கலாம்—

சாக்லெட் கேக்குகள் வழியும் புல்கானினுடைய கோட்டுப் பையில் வேண்டுமானால் ஆசை மகளுடைய அன்புத் திருவுருவம் இருந்திருக்கலாம்.

ஆனால் இந்தியாவிலோ, அவர்தன் குமாரியுடன் ஊர்வலம் வரவில்லை!

பலருக்கு இது ஏமாற்றம் தரும் காட்சியாகத்தான் இருந்தது!

வேடிக்கைப் பார்க்க சாலையின் இருமருங்கிலும் திரண்டிருந்த பெண்மணிகள் புல்கானின்—குருஷேவ் ஏறிவந்த கார் அப்பால் சென்றவுடன், 'அய்யையோ' நான் அவருடைய பெண்ணைப் பார்க்கவில்லையே!"—என்று வியந்துரைத்ததை நம்மில் பலர் காதாரக் கேட்டிருக்கிறோம்!

நேரு மட்டும்தானா அவரது புதல்வியுடன் பவனி வருகிறார்? இல்லை.

ஆண்டொன்றுக்கு பத்து லட்சம் சுரட்டிக் கொள்ளும் கவர்னர் பிரான் பிரகாசா மட்டும் இந்த வழக்கத்திற்கு விதிவிலக்கு அல்லவே?

காமினி என்னும் பெயர் பூண்ட மருமகள் சென்னை கவர்னருக்குத் துணை வருகிறார்!

— இதுபோன்ற நிகழ்ச்சிகள் சுயமரியாதை இயக்கத்தோருக்கு கசப்பான செய்தியல்ல!

அடுப்பூத வேண்டிய பெண்கள் அரசாங்க நிகழ்ச்சிகளில் பங்கு பெறுவது பெருமைக்குரியதுதான்—அடிமைப் பட்டுக் கிடக்கும் பெண்ணினத்திற்குக் கீர்த்தி தேடித் தருவதுதான்!




பொட்டு வைக்கத் தெரியும்; கோலம் போடத் தெரியும்-என்றிருந்த நிலைமையை மாற்றி குவலயம் ஆளுவதிலும் தங்கள் பங்கைச் செலுத்தத் தெரியும் என்பதை அவர்கள் நிலைநாட்டிக் கொள்கிறார்கள்!

—ஆனால் இதுபோன்ற நிகழ்ச்சிகளை பொதுவுடைமை நாடுகளோடு ஒப்பிட்டுப் பார்த்தால்தான் நாம் இவைகளை மகிழ்ச்சி ஆரவாரத்துடன் ஆதரிக்க முடியாத நிலையிலிருக்கிறோம் என்பதை உணர முடிகிறது!

ஐரோப்பிய நாடுகளில் மட்டும் நிலைமை வேறாக இருக்கவில்லை — முதலாளித்துவ நாடுகளில் எங்கும் நிலவும் பழக்கமும் இதுதான்!

ஆனால் அங்கே 'மனைவிகள்' அரசியலில் பெரும் பதவி வகிப்போரின் பக்கத்திலிருப்பார்கள். இங்கோ மகள்—மருமகள்—என்கிற அளவுக்கு 'கௌரவ ஆசனம்' எல்லோருக்கும் தரப்பட்டிருக்கிறது.

அமெரிக்காவில் திருமதி ஐசன்ஹோவரும் முக்கிய அரசியற் விழாக்களில் கலந்து கொள்கிறார்.

சோவியத் ரஷ்யாவிலோ நிலைமை இப்படி அல்ல!

திருமதி புல்கானினைப் பற்றி இப்போதுதான் வெளி உலகத்தவருக்குத் தெரிய ஆரம்பித்திருக்கிறது.

கணவன் அகிலத்தையே ஆட்டிக் கொண்டிருக்கும் பெரிய மனிதர்; அவருக்கு வாழ்க்கைப்பட்ட நான் என்ன பேறு பெற்றேனோ!'—என்று அவர் ஆனந்தப் பள்ளு பாடிக் கொண்டிருக்கவில்லை!

வீட்டிலே எனக்குப் பொழுது போகவில்லை; அவரோடு எல்லா விழாக்களிலும் கலந்து கொண்டு காலத்தை ஓட்டுகிறேன் என்றும்—பெருமை பேசவில்லை!

அவர் உழைக்கிறார்; ஆமாம், திருமதி நிக்கோலய் ஏ. புல்கானின் ரஷ்யாவின் இதர பிரஜைகளைப் போலவே நாளொன்றுக்கு எட்டு மணி நேரம் பாடுபடுகிறார்!

எப்போதும் அப்பாவுக்குப் பணிவிடைகள் செய்வதிலே ஆனந்தம் காணும் இந்திரா—மாமனாரின் மனம் கோணவிடாமல் பார்த்துக் கொள்ளும் காமினி-இவர்கள் நிறைந்த நாட்டிலே ரஷ்யாவின் காவலருடைய இல்லக்கிழத்தி எட்டு மணி நேரம் உழைப்பது இமயம் பணிவதைப் போல ஆச்சரியமாகத்தானிருக்கும்—ஆனாலும் இது அங்கே சாதாரண விஷயம்.

'மார்கரெட் ஹிக்கின்ஸ்' என்னும் மேல்நாட்டுப் பத்திரிகை நிருபர் சொல்லுகிறார்: "ராஜிய வைபவங்களிலும் இதர விழாக்கொண்டாட்டங்களிலும் சோவியத் நாட்டு அரசாங்கப் பணியாளர்களின் மனைவிகள் ஏன் கலந்து கொள்வதில்லை தெரியுமா?

"எப்போதும் அவர்கள் வேறு வேலைகளில் ஈடுபட்டிருக்கிறார்கள்"

"உயர் பதவி வகிக்கும் கணவன்மார்களை விட, அவர்களுடைய மனைவிமார்கள் ஓய்வின்றி உழைக்கிறார்கள்."

—இதுதான் சோவியத் நாட்டுப் பெண்மணிகளது படட்பிடிப்பு!

திருமதி புல்கானின் மாஸ்கோ நகரத்துப் பள்ளிக்கூடமொன்றில் முழு நேர ஆங்கில ஆசிரியராகப் பணியாற்றுகிறாராம்!

கணவன் புல்கானின் சாதாரணமாக இருந்தபோதும் அவருக்கு அந்த உத்தியோகம்தான்! இப்போது பிரதமராகிவிட்டார். மனைவியையும் ஆசிரியைப் பதவியிலிருந்து, தலைமை ஆசிரியைப் பதவிக்கு உயர்த்தி விட்டாரோ என்று எண்ணிவிடாதீர்கள். இப்போதும் அவர் ஆசிரியைதான்!

அவர் பெருமையோடு சொல்லிக் கொள்கிறாராம்—எனக்கு உடல்நிலை இடம்

★ தொடர்ச்சி 10-ம் பக்கம்





# தெய்வ மனிதர்கள்!

**பி. சி. கணேசன்**
பி. எஸ்ஸி; பி. டி.

அதோ தாடியுடன் காணப்படுகிறாரே, அந்தக் கிழவர்; நீண்ட கூரிய மூக்கு, ஊடுருவிப் பார்க்கும் விழிகள், உயர்ந்து பரந்த நெற்றி, கம்பீரமான பெரிய தோற்றம்! அவரை யாரென்று தெரிகிறதா உங்களுக்கு தெரியாவிட்டாலும் பரவாயில்லை; அவர் எங்கே போகிறார் என்று பார்க்க அவரைத் தொடர்ந்து செல்லுவோம்.

கம்பீரமாகக் காட்சியளிக்கிறதே, அது ஒரு பெரிய கோயில்; ஒரு காலத்தில் கல்விக்கும் கலைக்கும் இருப்பிடமாயிருந்த அந்தக் கோயில் இப்பொழுது கள்ளர்களின் குகையாகவும்—மத அங்கீகாரம் பெற்ற கள்ளர்கள்தான் அவர்கள்—காமுகர்களின் கோட்டமாகவும் விளங்கி வருகிறது. பெரியவர் இப்பொழுது கோயிலின் வாயிற்படியண்டை வந்துவிட்டார். சிற்பிகளின் கைவண்ணத்திற்கு எடுத்துக் காட்டாகவும், சிந்தனைத் தூய்மைக்கு வழிகோலுவதாகவும் அமைந்த இந்த ஆலயம் சிறுமதியாளரின் பாடிவீடாய் அமைந்து விட்டதை எண்ணிப் பெருமூச்சு விடுகிறார் அந்தப் பெரியவர். பிறகு மெதுவாகப் படிகளைத்தாண்டி ஆலயத்தினுள் நுழைகிறார். எங்கும் ஒரே இருள்—வௌவால்களின் நாற்றம்! அவருடைய காலடி ஓசையைக் கேட்டவுடனேயே பதுங்கிக் கிடந்த வௌவால்களெல்லாம் படபடவென்று சிறகடித்துப் பறக்கின்றன. பெரியவர் மூக்கைப் பிடித்துக் கொண்டு நடக்கிறார். அதோ, அங்கே கோயிலின் இருண்ட மூலையில் காவியுடைக்காரன் ஒருவன், கமண்டலம், ஜபமாலை முதலிய தன்னுடைய 'டிரேட்மார்க்'கில் ஏதும் குறையாமல், அமைதியாக ஏதோ ஜபித்துக் கொண்டிருக்கிறான் உண்மையான ஜபம்தானோ, அல்லது 'அடியாளி'ன் வருகை பார்த்து, அவள்வரும் வரையில் அவளுடைய நாமத்தை வாயினிக்க ஜபித்துக் கொண்டிருப்போமே யென்ற எண்ணமோ, நாமறியோம்! பெரியவர் இப்பொழுது பெருமூச்சுவிடவில்லை அவருடைய முகத்தில் ஒரு விதமான ஆவேசம்.

''ஐயா...ஐயா...!'' பெரியவர் சத்தம் போட்டார். காவி உடைக்காரர் லேசாகக் கண்விழித்துப் பார்த்தார். கட்டழகி ஒருத்தியும் எதிரிலில்லை! கண்கள் ஒளி வீசப் பெரியவர் நின்று கொண்டிருந்தார்.

''யாரய்யா நீர், சமய சந்தர்ப்பம் தெரியாமல்! என் ஜபத்தைக் கெடுத்து விட்டீரே'', சாமியார் ஓலமிட்டார் பெரியவர் புன் சிரிப்போடு. ''மந்திரம் ஜபித்தல் தோத்திரம் பாடுதல், ஜபமாலை உருட்டுதல்— இவைகளெல்லாம் எதற்காக, ஐயா?'' என்றார். காவியுடைக்காரர் திடுக்கிட்டு, ''எதற்காகவா? என்ன கேள்வி ஐயா இது? எல்லாம் 'அவனை'க் காணத்தான்!'' என்றார்.

''பைத்தியக்காரரே! ஆலயத்தின் கதவுகளையெல்லாம் அடைத்துவிட்டுத் தனிமையான இந்த இருண்ட மூலையில் யாரை, யாருக்காக வழிபாடு செய்கிறாய். கண்ணை நன்றாக அகல விரித்துப் பார்; நீ தேடும் கடவுள் உன் முன் இல்லையென்பதை உணர்வாய்!''

''ஆண்டவன் ஆலயத்தில் இல்லையென்றால் பின் அவன் எங்கேதான் இருக்கிறான்?'' காவியுடைக்காரர் வினா எழுப்பினார்.

''எங்கே இருக்கிறானா? இதோ, என்னோடு வா, காட்டுகிறேன்'' என்று கூறிப் பெரியவர் காவியுடைக்காரரை அழைத்துக் கொண்டு வெளியே புறப்பட்டார்.

ஆலயத்தின் அந்தகாரத்திலிருந்து மந்தமாருதம்வீசும் வயல் வெளிக்கு அவர்கள் வந்து விட்டனர்.

''எங்கே கடவுள்?''—கேட்டார் காவியுடைக்காரர்.

''அதோ!'' சுட்டிக் காட்டினார் பெரியவர்.

சற்றுத் தூரத்தில், வயல்வெளியில் உழவர்கள் உழுதுகொண்டிருந்தார்கள்!

''அதோ, அங்கேகூடக் கடவுள் இருக்கிறார்!'' — பெரியவர் இன்னொரு திசையைக் காட்டினார். அங்கே பல காரிகைகள் கடும் வெய்யிலில் உட்கார்ந்து கல்லுடைத்துக் கொண்டிருந்தனர், பாதையைச் செப்பனிடுவதற்காக.

காவியுடைச் சோம்பேறி விழித்தார்!

''கடவுள் இந்தத் தொழிலாளர்களோடு, இரவிலும் பகலிலும், குளிரிலும் கோடையிலும், எப்பொழுதும் இருக்கிறார். உழைப்பின் உருவம்தானப்பா ஆண்டவன். இவர்களுடையதைப்போல் அவனுடைய உடையும் தூசிபடிந்த கந்தல் உடைதான். இதோ, நீ அணிந்திருக்கும் காவியுடை வேடத்தைக் களைந்துவிட்டு, பாட்டாளியோடு பாட்டாளியாய்ப் பணியாற்று; அதுவே நீ ஆண்டவனுக்குச் செய்யும் அரிய சேவை!'' பெரியவர் உணர்ச்சி ததும்பப் பேசினார்.

''அப்படியானால் என் ஆத்ம விடுதலை?'' -காவியுடைக்காரர் கேட்டார்.

''ஆண்டவனே தன்னுடைய கடமையாகப் படைப்புத் தொழிலை ஏற்றுக்கொண்டிருக்கும் போது, நம் கடமையை நாம் மறந்து, மக்கட் சமுதாயத்திடமிருந்து ஒதுங்கியிருந்து, சுய தேவைகளை மட்டும் பூர்த்தி செய்துகொண்டு வாழும் பயனற்ற வாழ்வு எப்படி ஆத்ம விடுதலையாகும்?''

காவியுடைக்காரர் மௌனமானார்.

''போதுமப்பா நீ தியானத்தில் அமர்ந்திருந்தது. மலர்களையும், மற்றை அருச்சனைப் பொருள்களையும் தூர எறிந்துவிடு. புழுதியேறி, உடைகிழிந்து கந்தலானால் என்ன? இரத்தத்தை உழைப்பாக்கிப் பாடுபடும் பாட்டாளியின் ஒவ்வொரு வியர்வைத் துளியிலும் ஆண்டவன் ஒளி வீசுகிறான்!''

பெரியவரின் அறவுரையைக் கேட்ட காவியுடைக்காரர் உழைப்பாளியானார்!

★

நான் மேலே தீட்டியிருக்கும் நிகழ்ச்சியில் நாடக பாணியில் அமைத்திருக்கும் முறைதான் என்னுடைய சரக்கே தவிர, கருத்துக்கள் எல்லாம் வங்காளக் கவிஞர் தாகூர், நோபில் பரிசுபெற்ற அவருடைய நூலான 'கீதாஞ்சலி' யின் பதினோராவது பாடலில் கூறியிருப்பவை; இதோ, அப்பாடலின் தமிழ் மொழிபெயர்ப்பு.

''மந்திர முணுமுணுப்பை, தோத்திரம் பாடுவதை, ஜெபமாலை உருட்டுவதை விட்டுவிடு. கதவுகள் அடைபட்டுக் கிடக்கும் ஆலயத்தின் தனியான இருண்ட மூலையில் யாரைச் சேவிக்கிறாய்? கண்ணைத் திறந்து பார்; கடவுள் உன் முன்னிலையில் இல்லையென்பதை உணர்வாய்.

''கடின நிலத்தைப் பண்படுத்தும் உழவனிடமும், பாதையமைக்கக் கல்லுடைக்கும் பாட்டாளியிடமும் அவர் இருக்கிறார். கோடையிலும் குளிரிலும் அவர்களோடு இருக்கிறார். அவருடைய உடையெல்லாம் புழுதி படிந்திருக்கிறது. காவியுடையைக் களைந்து விட்டு அவரைப் போலவே நீயும் புழுதி மேட்டிற்கு வா.

''ஆத்ம விடுதலையா? அது உனக்கு எங்கே கிடைக்கும்? நம் தலைவரே (கடவுளே) படைப்பு என்ற பந்தத்தை விருப்பத்தோடு ஏற்றுக் கொண்டிருக்கிறார். நம்மோடு எப்பொழுதுமே அவர் இணைந்திருக்கிறார்.

''பூக்களையும் தூபதீபநைவேத்தியங்களையும் தூக்கியெறிந்து விட்டு உன் தியானத்திலிருந்து வெளியே வா! உன் உடை கிழிந்து அழுக்கேறிப் போனால் என்ன தீமை விளைந்துவிடும். உழைப்பிலும், அதனால் ஏற்படும் வியர்வையிலும் அவனைப் பார்க்கலாம்; அவனோடு இருக்கலாம்.''

தாகூரின் கவிதைகளில் இலக்கியச் சுவையும் கருத்தாழமும் காண்போர், அதே கருத்துக்களை மலிவான பதிப்புகளில் சுயமரியாதைக்காரன் வெளியிடும்போது 'மட்டரக இலக்கியம்' என்று பெயர் சூட்டுவானேன்? மக்களிடையே வாழ்ந்து அவர் தம் உயர்வுக்கு அரும்பணிபுரிந்து, மகத்தான தியாகங்களைச் செய்த புத்தர், ஏசுநாதர், நபிகள் நாயகம் காந்தி, பெரியார் போன்றவர்களை மனித தெய்வங்கள் என்று போற்றுவதற்கும், சங்கராச்சாரியார், ஆதீனங்கள், ரமணரிஷி போன்றோரைப் போற்றாமல் சுயமரியாதை இயக்கத்தினர் கண்டிப்பதற்குமான காரணம் மேலேயுள்ள தாகூரின் கவிதையில் இருக்கிறது. அறிவுடையோர் சிந்திக்கட்டும்!

★

## திராவிட மாணவர் முன்னேற்றகழக
## அமைப்புக் குழு

★

**ஜன. 28—ந் தேதி**
**அண்ணாமலை நகரில்**
நடைபெறும்

திராவிட மாணவர் முன்னேற்றக் கழக அமைப்புக்குழு, தென்னாற்காடு மாவட்டம் சிதம்பரத்தையடுத்த அண்ணாமலை நகரில், 28—1—56 சனிக்கிழமையன்று மாலை 3-மணிக்கு நடைபெறும்.

சிறப்பு அழைப்பின்பேரில் தி. மு. கழகப் பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்களும், தோழர் கே. ஏ. மதியழகன் அவர்களும் கலந்து கொள்ளுகிறார்கள்.

அமைப்புக் குழு, திராவிட மாணவர் முன்னேற்றக் கழக எதிர்கால வளர்ச்சி பற்றிய பல பிரச்னைகள் குறித்து விவாதித்து முடிவு செய்ய இருக்கிறது.

**டி. கே. பொன்னுவேலு,**
அமைப்பாளர்,
திராவிட மாணவர் முன்னேற்றக் கழகம்.

# காவியமும் ஓவியமும்

காவியம் புனைவதிலே அவனுக்கு நிகர் அவன்தான். இயற்கை எழிலைக் கண்டு கற்பனையை அதோடு கலந்து கவிதை புனைவதிலே அவன் வல்லவன். கவிதை தீட்டுவதே அவன் வாழ்க்கை! வண்ண மலரை நாடிச் செல்லும் வண்டைப் பார்ப்பான்; காதல் கவிதை யொன்றை உடனே உருவாக்குவான்! வீதியிலே நாதியற்று வாடும் மனிதக் குடும்பத்தைப் பார்ப்பான்; 'வறுமையின் கோரம்' என்ற பாடலை உடனே எழுதி முடிப்பான்! வீரத்தைப் பற்றிப் பாடுவான்; சோகக் கதையொன்றைக் கவிதையாக்குவான்; கனவில் கண்ட காட்சிகளை நனவில் கற்பனை படுத்திக் காவியம் புனைவான்! அவன் கலைஞன்! கல்லிலே, மண்ணிலே, நீரிலே.. எல்லாவற்றிலுமே கவிதையின் மூலம் புதைந்திருப்பதாக அவன் நினைப்பு!

அவள் ஓவியம் தீட்டுவதிலே ஒப்புவமையில்லாது விளங்கினாள், கலையின் பிறப்பிடமே அவள்! அவளுடைய காந்தள் விரல்கள், எழுதுகோலைப் பிடித்த நிலையிலே, காந்தம்போல் பார்ப்பவர்களைக் கவர்ந்திடும். மலையைத் தழுவும் மேகம், கடலோடு சேரும் கதிரவன், துள்ளியோடும் மானைத் துரத்தும் வேங்கை—இப்படி எத்தனையோ காட்சிகளை அவள் ஓவியமாகத் தீட்டி விட்டாள். 'பாலுக்கழுங் குழந்தை முகத்தைப் பார்த்தழுவாளதன் தாய்' என்ற பாடலின் கருத்தைக் கூட கண் கவர் ஓவியமாக்கி சிந்திக்க வைத்து விட்டாள் அந்த கலைப் பெண்!

அவனிடம் கலை காவியமாக காட்சியளித்தது; அவளிடம் அது ஓவியமாக உருவளித்தது. எங்கிருந்தோ வந்த அவர்கள் எப்படியோ ஒன்று சேர்ந்தார்கள். கலையும், கலையும் ஒன்று சேர்ந்தன! கன்னியாயிருந்த அவளுக்கு அவன் கணவனானான்.

அவளழகை அவன் கவிதையிலே வர்ணித்தான். அவனழகை அவள் ஓவியமாகத் தீட்டினாள், சில காலம் ஓடிற்று. இரண்டு கலைகளின் சேர்க்கையினாலே மூன்றாவதாக ஒரு கலை தோன்றிற்று; அந்த இருவருடைய பிரதிபலிப்பான அந்தக் கலைக்கு உண்மையாகவே உயிரிருந்தது. அந்தச் செல்வச்சிசு அழகிலே, அப்பனையும் அம்மையையும் சரிபாதி பங்கிட்டுக் கொண்டது! 'பாலுக் கழுங் குழந்தை முகத்தைப் பார்த்தழுவாளதன் தாய்' என்ற பாடலுககு ஓவியம் தீட்டியவள், கூவியழும் தன் குழந்தையை நினைவிலே வைத்தாளில்லை!

ஒரு நாள்......

நாட்டிலில்லாத எழிலைக் காட்டிலே காணச் சென்றனர் 'காவிய'த்தலைவனும், 'ஓவிய'த் தலைவியும். கணவன் மேற்கே சென்றான். மனைவி கிழக்கே சென்றாள். அவன் கவிதையெழுத கருத்தை நாடிச் சென்றான்! அவள் ஓவியம் வரைய உதாரணம் தேடிச் சென்றாள்!

வானத்தை முட்டிய மலையொன்றிலிருந்து வந்து விழுந்து கொண்டிருந்தது அருவியொன்று; அதைச் சுற்றிலும் தேன் கூடுகள்; நாற்புறமும் கண் கவரும் சோலைகள்; காதல் கீதம் பாடும் புள்ளினங்கள். எத்தகைய சூழ்நிலை...! எப்போது கிடைக்கும் இது போல், இனிமேல்... அழகு கவிதை யெழுத...

கொட்டும் நீர் வீழ்ச்சியும் வானத்தைமுட்டும் மலையும் கண்களை வெட்டும் காட்சிகளாயிருந்தன கலைஞனுக்கு. அவனிதயத்திலிருந்து கவிதை யூற்று கிளம்பிற்று! நீர் வீழ்ச்சியோடு போட்டியிட்டுச் சென்றது... பொங்கும் அலை கடலை எங்கும் காண முடியாது! அது போல் கவிதையும் எப்போதும் தோன்றுதல்லவா!

**ந. சுந்தரம், பி. எஸ்ஸி.,**

கிழக்கே சென்ற தலைவியைத் தாமரைத் தடாகமொன்று தடுத்து நிறுத்தியது. நீரின் மேல் மிதந்து கொண்டிருந்த தாமரை இலைகளுக்கிடையே மலர்ந்த தாமரை மலர்களும், மலராத மொட்டுகளும் பரவிக் கிடந்தன. குளிர்ந்த நீரிலே மகிழ்ச்சியுடன் நீந்திக் கொண்டிருந்தன அன்னப் பறவைகள் சில. கண்ணைக் கவரும் இக் காட்சியை வண்ண ஓவியமாக்கிக் கொண்டிருந்தாள் அந்தக் காவியத் தலைவனின் மனைவி.

தென்றலாயிருந்த காற்று வேகமாக வீச ஆரம்பித்தது. வானம் இருண்டதால் வையகமும் இருண்டது, கதிரவனைக் கருமேகங்கள் மறைத்தன.

சிறிது நேரத்தில் மழை கொட்ட ஆரம்பித்தது. வேகமாக அடித்த காற்றினால் மரங்களெல்லாம் ஆடத் தொடங்கின, அந்த நிலையிலும் அந்த ஓவியப் பெண் அங்கேயே உட்கார்ந்திருந்தாள். அவளருகிலிருந்த ஒரு மரத்தில் பறவைக்கூடொன்றிருந்தது. கிளைகள் ஆடிய வேகத்தில் கூட்டிலிருந்த பறவைக் குஞ்சொன்று கீழே விழுந்து விட்டது. அலைக் காற்றிலும், கடு மழையிலும் அகப்பட்டு வேதனையடைந்து கொண்டிருந்தது அந்த இளம் உயிர். சேய் படும் அல்லலை அதன் தாய் கவனித்து விட்டது, கூட்டிலிருந்து பறந்து தன் குழவியைச் சுற்றி வந்தது! தன்குஞ்சு படும் அவஸ்தையைக் கண்டு தாய்ப் பறவை பரதவித்தது. அந்தக் காட்சியைக் கண்ட ஓவியப் பெண்ணுக்கும் மனம் நெகிழ்ந்தது. எழுது கோலையெடுத்தாள்; ஓவியம் வரையத் தொடங்கினாள் அந்தக் கொட்டும் மழையிலும்! மழையிலே அகப்பட்டுக் கொண்ட தன் செல்வத்தைத் தன்னுடைய இறக்கைகளினால் மூடி மறைத்துக் கொண்டு தாய்ப் பறவை காற்றையும் கடு மழையையும் பிள்ளைப் பாசத்தால் சகித்துக் கொண்ட காட்சியை அப்படியே படமாக்கி விட்டாள் அந்தப் பெண்.

புயலோடு சேர்ந்த மழையில் அவனுக்குக் கூட ஒரு அழகிய காட்சி கிடைத்தது காவியம் எழுத. மழைக்காக ஒரு பசுவும அதன் இளங்கன்றும் மரத்தடியில் ஒதுங்கியிருந்தன. கன்றைக் குழையக் குழைய தன் நாக்கினால் தடவிக் கொண்டிருந்தது பசு. அந்தக் கன்று கூட, குளிரின் கடுமையைத் தன் தாய் காட்டிய பாசத்தினால் உணரவில்லை. இந்த நிலையில் எங்கிருந்தோ வந்தது ஒரு வேங்கை. வேங்கையைக் கண்ட பசு நடுங்கிற்று; தன்னுயிர் போய் விடுமே என்பதற்காக அல்ல! கன்றைக் கொன்றுவிடக் கூடாதே அந்த வேங்கை யென்ற பதட்டத்தினால்! வேங்கையின் பலத்தை உணர்ந்திருந்தும், பாசம் அந்தப் பசுவை வேங்கையின்மேல் பாயச் செய்தது. வேங்கைக்கும், பசுவுக்கும் போர். கவிதை எழுதிக் கொண்டிருந்தான் அந்தக் கலைஞன் 'பாசம்' என்ற தலைப்பிலே!

இருவரும் வீடு திரும்பினர். தனித் தனியாக, அவளுக்குத் தான் எழுதிய கவிதைகளைக் காட்டினான் அவன்; அவள். அவனுக்குத் தான் வரைந்த ஓவியங்களைக் காண்பித்தாள். அவன் மகிழ்ந்தான்; அவளும் மகிழ்ந்தாள்!

உள்ளே சென்ற அவள் ஓடி வெளியே வந்தாள்; 'பிள்ளையைக் காணோம்' என்றாள்! 'ஏன் நீ அவனை ஜாக்கிரதையாகக் கவனித்துக் கொள்ளக் கூடாது' என்றான் அவன். 'நீங்கள்தான் பார்த்துக் கொள்ளக் கூடாதோ' என்று பதில் தந்தாள் அவள். அவன், 'நான் கவிஞன், கலைஞன்' என்றான். நானும்தான் 'கலையரசி' என்றாள் அவள்!

அப்போது அங்கே வந்தான் அவர்களடைந்த இன்பத்தின் எதிரொலி! உடலெல்லாம் சேறு; ஆடையெல்லாம் அலங்கோலம்; குழலெல்லாம் மழை நீர்; சோர்வடைந்த உடல், இந்தக் காட்சிகளுடன், மழையிலே தன்னைப்பெற்ற கலைஞர்களைத் தேடிச் சென்ற அந்தப் பாலகன் அவர்கள் முன் தவழ் நடை போட்டு வந்தான்.

பறவைக்கூட்டை நினைத்துக் கொண்டாள் அவள்; பசுவின் போரை நினைத்துக் கொண்டான் அவன்; இருவருடைய கண்களிலும் நீர் சுரந்தது. சிறுவனை அள்ளி அணைத்துக் கொண்டாள் அவள்! இப்போது அவள் கலைப் பெண் அல்ல; தாய்! பாலகனைப் பாசத்தோடு தடவிக் கொடுத்தான் அவன்; இப்போது அவன் கலைஞன் அல்ல; தந்தை!

இவர்களின் நடைமுறைகள் விளங்காமல் மழலையில் ஏதோ பேசினான் பாலகன்; இதுதான் தீஞ்சுவைக் காவியம் என்றாள் அவள்! கைகளில் படிந்த சேற்றை அவள் முகத்தில் தடவினான் அச் சிறுவன்; இது தான் கண்கவர் ஓவியம் என்றான் அவன்!

★

**சிறுகதைப் போட்டியில் கலந்துகொண்ட கதை!**

# மலர் மணம் நுகர்ந்தோர்!



மலர் கண்டேன் — அப்பப்பா; இரண்டு ரூபாய்க்கு நாலு ஆர்ட் பிளேட் ஓவியங்கள்! இருநூறு பக்கங்கள்- நடுவிலே பக்கம் தவருக அச்சியற்றப்பட்டிருக்கிறது. தனித் தாட்களாக எண்ணிப் பார்த்தேன் 220 பக்கங்களுக்கு மேலிருக்கிறது. லாபத்தை எதிர் பாராமல், கொள்கை பரவுதல் என்னும் குறிக்கோளை மட்டும் மனதில் கொண்டு மலர் தயாரித்திருக்கிறீர்கள் என்பதை மலரின் ஒவ்வொரு பக்கமும் எடுத்துச் சொல்லுகிறது — மிக உயர்வான முயற்சி.

வி. கே. தணிகாசலம்,
சேலம்.

★

முரசொலி மலர் கிடைத்தது. மகிழ்ச்சி. முரசொலி மலர் அவாளுக்கொரு சவால். புதிய முறையிலே புதுப் பொலிவோடு கருத்துக் களஞ்சியமாய் கண்கவர் எழிற் பேழையாய் மலர் திகழ்கிறது—வாழ்க!

ஆதிலட்சுமி
கவிஞர் வாணிதாசன்,
கடலூர். என். டி.

★

'முரசொலி' மலர் பெற்றேன் மூன்று கட்டுரைகள் படித்தேன். புரட்டியதோ முப்பது தடவைக்கும் மேலிருக்கும். மலரை எவ்விதம் பாராட்டுவதென்றே புரியவில்லை. நற்கரும்புச் சாற்றினிலே, தேன் கலந்து, பால் கலந்து செழுங்கனித் தீஞ்சுவை கலந்து உண்டு களிக்கும் சுவையைவிட 'முரசொலி' என் ஊன் கலந்தும் உயிர் கலந்தும் உவட்டாமல் இனித்துக் கொண்டே இருக்கிறது. கடந்த ஆண்டை விட மலரின் தரம் தலை நிமிர்ந்து இருக்கிறது. தமிழன் இன உணர்ச்சியும் சீறி எழும் அலை கடலைப் போல் மிகுந்து கொண்டே வருகிறது. 'முரசொலி'க்கு என் பொன்னனை வாழ்த்துக்கள்!

அதிரட்டும் முரசொலி!
இன உணர்ச்சி ஓங்கட்டும்!
இரா. கோதண்டராமன்,
சென்னை.

★

மலர் காண மகிழ்ச்சி! கடந்த ஆண்டினும் மேம்பட்டதாய் அமைந்துள்ளது குறிப்பிடத் தக்கதோடு, போற்றுதற்கு உரியனவாகும். மலரின் முகப்புச் சித்திரம், மலருக்கு உயிராகவும், அண்ணாவின் 'எழில் திராவிடம் எழுக' இதயமாகவும், 'தெய்வ லீலை'கள் கண்களாகவும் அமைந்துள்ளது. தங்களின் முயற்சியில் என்னைக் கவர்ந்தது 'தென்னவன் காதை' எனலாம். அடுத்த மலரை எதிர் பார்க்கிறேன்.

ச. இராமையன்,
திருப்பாப்புலியூர்.

அஜந்தா முறையில் 'தோட்டா' தீட்டியிருக்கும் மூவர்ண ஓவியம் மனதைக் கவர்கிறது. இதுபோன்று அடுத்த மலரில் பல வேண்டும்!

சோம சேகர்,
தூத்துக்குடி.

★

"முரசொலி" பொங்கல் மலர் சிந்தனையாளர்களுக்கு சிறந்த விருந்து; ஓவிய ரசிகர்களுக்கு ஒப்பற்ற விருந்து; கவிதையாளர்களுக்குக் கற்கண்டுப் பெட்டகம்; புராணப் பிரியர்களுக்கும் அரசியல் எத்தர்களுக்கும் ஓர் அபாய அறிவிப்பு! ஒவ்வொருவருடைய இல்லத்திலும் இருக்க வேண்டிய எழிலேடு "முரசொலி" பொங்கல் மலர்!

சி. கே. நடராசன்,
கோவை.

★

அழகாக தீட்டப்பட்டுள்ள அட்டைப் பட ஓவியம் மலரை அதிகப்படியாக அலங்கரிக்கின்றது. ஆரிய ஏடுகளுக்கு சவால் விடும் முறையில் அமைந்திருக்கின்றது மலர். புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் எழுதியிருக்கும் "கோயில் இரு கோணங்கள்" என்ற நாடகம் மாணவர்களுக்கு வழிகாட்டியாகவும், சைவர்களின் சபல புத்தியையும் எடுத்துக் காட்டுகின்றது. கருணாநிதியின் கேலிச் சித்திரம் 'பரதாயணம்' பக்தர்களுக்குப் பதை பதைப்பை யுண்டு பண்ணுவதாக அமைந்திருக்கின்றது. 'கிரேக்கப் பெரியார்' என்னும் தலைப்பிட்டு எழுதியிருக்கும் சாக்ரடீசின் வாழ்க்கை வரலாறு அப்படியே படம் பிடித்துக் காட்டுவதுபோல் இருக்கின்றது. 'தென்னவன் காதை தெவிட்டாத' காவியம். 'அரும்பு' அனைவரும் படித்து இன்புற வேண்டிய குடும்பக் கதை. வருகிற ஆண்டு இந்த ஆண்டை விட இன்னும் சிறந்த அம்சங்களைக் கொண்டு சிறப்பிக்க வேண்டுமென்று கருதுகிறேன்.

இராசசேகரன்,
நுங்கம்பாக்கம்.

★

ஜி. எச். ராவ், வர்ணப் படுத்தியிருக்கும் மூவர்ணப் படத்தில் அண்ணாவின் உருவம் மட்டும் இன்னும் கொஞ்சம் கவனத்துடன் தீட்டப் பட்டிருந்தால் இதைவிட மேன்மையாக இருந்திருக்கும்.

'மக்கள் மணி'
கோவை.

★

முன் முகப்பு எழில் ஓவியமாடும் உள்ளே அண்ணாவும், பொது செயலாளரும் வீற்றிருக்கும் விதமே தனிசோபை அளிக்கிறது. மற்றும்பல அறிஞர்களின் கருத்தோவியங்களும், ஆசிரியர் எழுதிய பரதாயணம், தென்னவன் காதை, கிரேக்கப் பெரியாரும் பரிசுக்குரிய மூன்று சிறு கதைகளும், கருத்தைக் கவரும் வகையில் அமைந்திருக்கிறது. இன்னும் இரு ஓவியங்களும் குக்கிராமத்துப் பாவையாக வரைந்திருக்கும் படமும் எழில் நிறைந்ததாய் இருந்தது.

விஞ்ஞானிகளின் உருவமும் அவர்கள் கண்டு பிடித்து நாட்டிற்கு உதவிய பல பொருள்களின் மூலமும் அவர்களை எல்லாம் ஒன்று திரட்டி பொங்கல் மலரின் மூலம் அறிமுகப் படுத்திய ஏடாம் 'முரசொலி' வாழ்க என வாழ்த்துகிறேன்.

இ. சு. கருணாகரன்,
செம்பனார்கோயில்.

★

இவ்வாண்டு பொங்கல் மலர் கண்டேன். மலரைக் கையில் தொட்டதும் உள்ளத்தில் விவரிக்க முடியாத ஓர் உணர்ச்சி. (தான் காதலித்த காதலியை முதன் முறையாக தொடும்போது ஏற்படும் உவகை உணர்ச்சி) ஆம்! அவாள் மலர்களை விட அருமையான மலர் ஒன்று நம்முடையது எனும்போது இதயம் இனிக்காமலா இருக்கும்! மலரை மூன்று முறை புரட்டினேன். படிக்க மனம் வரவில்லை. காரணம் படித்து முடித்துவிட்டால் இன்னும் ஓராண்டல்லவா காத்திருக்க வேண்டும், மறு முறை மலர் காண! ஆண்டுக் கொருமுறை வரும் பொங்கல் மாதமொருமுறை வந்தால்கூட இதய உணர்ச்சி அடங்காதுதான்!

என். இராமனுதன்,
மதுரை.

★

'பரதாயணம்' பிரமாதம்! சுருங்கக் கூறின் படிக்க வேண்டிய பொன்னேடு. பாதுகாக்க வேண்டிய அறிவுப் பெட்டகம்!

கல்லாவி-வேலன்,
சேலம்.

★

மலரை வாங்கிப் படித்ததும் புரட்சிக் கவியின் பாடல் நினைவுக்கு வந்தது:

'மூடத்தனத்தின் முடைநாற்றம் வீசுகின்ற
காடு மணக்க வரும் கற்பூர பெட்டகமே'

தீபாவளிக்கும், ஏகாதசிக்கும் மலர் என்ற பெயரால் விளம்பரத் தொகுப்பு நூலை வெளியிடும் 'அவாள்' பத்திரிகைகள் திராவிடத்தில் பரப்பி வரும் முடை நாற்றக் கருத்துக்களைப் போக்க திராவிடம் மணக்க வந்த கருத்துப் பெட்டகம், முரசொலி மலர்!

வளர்க அதன் தொண்டு.

முரசு. மு. இராமகிருட்டினன்,
வந்தவாசி.

★

'பரதாயணம்' பக்தர்களுக்கோர் சவுக்கடி! 'தென்னவன் காதை' தென்னகத்தின் வீடனார்களுக்கோர் சூடு! ஏனைய எழுத்தோவியங்கள் இன்பம் பயப்பனவாக அவாள் ஏடுகளுக்கோர் சவாலாக அமைந்திருந்தது!

ஆர். எஸ். பிரகாசம்,
பரமக்குடி.

★

கட்டுரைகளும் பரிசுப் போட்டிக் கதைகளும் யாவருடைய உள்ளத்தையும் களிப்படையச் செய்யும் தன்மையுள்ளவை. இயல், இசை, நாடகம் ஆகிய முத்தமிழிலும் தங்கள் 'முரசொலி' ஆதித்தனைக் கண்ட தாமரை போல் மலர்ந்து மணம் கமழ்ந்து காணப்படுகிறது.

ஓவியங்களும் (முக்கியமாக அட்டை முகப்பு) தலை சிறந்து விளங்குகிறது. அரசியல் கார்ட்டூன் பலே பிரமாதம்!

சேதுராமன்,
சென்னை-4.

★

முக்கனி உண்டேன்-முழு ஆனந்தம் கொண்டேன். முகப்புப் படம் பண்டைத் தமிழகத்தின் எழில் காட்டும் ஓவியம்! மொத்தத்தில் மலர் முத்தாரம்— வைரக் குவியல்!

ஏ. ஜெயசீதம்,
சென்னை-21.

★

அதிகம் ஏன்? கட்டுரை ஒவ்வொன்றும் கடுகைத் துளைத்து கடலைப் புகுத்தியதுபோல்.

ஒவ்வொரு ஆரியப் பத்திரிகையும் தீபாவளி மலரை வெளியிடும் போது பொருமைப் படுவேன். அதை நீக்கி வருகிறது முரசொலி. விலை குறைவு. விஷயங்கள் அதிகம்.

வாழ்க முரசொலி!

ஏ ஹக்கீம்,
அரகண்டநல்லூர்.

★

இன்று மாலையில் 'முரசொலி'யின் எழில்மிகு பொங்கல் மலரை விற்பனையாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளும்போதே பெருமையால் பூரித்தது என் நெஞ்சம்.

'அவாள்' ஏடுகள் திகிலடையவும், நாம் அளவிலாப் பெருமகிழ்வெய்தவுமான நிலை ஏற்படுகிறது 'முரசொலி'யின பொன் மலரைக் காணும்போது! மலரின் சிறப்புப் பற்றி எழுத எண்ணினால் அதற்கே ஒரு தனி மலர்தான் வெளியிட வேண்டும்!

அரு. அமுதன்,
சங்கரன்கோவில்.

★

மலரை எடுத்தவுடன் எதைப் படிப்பது என்று திகைக்க வைக்கிறது. சென்ற ஆண்டை விட மலர் எல்லாவற்றிலும் சிறந்து இருக்கிறது!

சி. சு. தேவராசன்,
சிறுதையூர்.

★


**நன்றி**

பொங்கலன்று ஏராளமான வாழ்த்துக்களை அனுப்பிய பாசமுள்ள தோழர்களுக்கெல்லாம் என் நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.


அன்புள்ள,
**மு. கருணாநிதி**

# ★ தலைநகரில் தமிழர் விழா! ★


501




1. இசைச் செல்வி கஸ்தூரியின் இசையுடன் துவங்கியது.



2. விளையாட்டுப் போட்டியில் இரும்புப் பந்தெறியும் வீரர்.




3. சைக்கிள் போட்டி.




4. வேடப் போட்டியில் "புதுமைப் பித்தன்."



5. செல்லத் தமிழ்பேசி சிரிப்புக்கு வித்திட்டார் தலைவர் இளம்பரிதி



6. மதியழகன் மகிழ்ச்சி விருந்து படைத்தார். அருகே சிற்றரசு, அப்பாதுரையார்.



★ 7. வெற்றி பெற்றவர்கட்கு பொதுச் செயலாளர் பரிசளிக்கிருர்.



8. மு. க. வின் "உலா வரும் வெள்ளிக் கோப்பையை 14-வது வட்டம் பெறுகிறது. அருகே செங்குட்டுவன், சுந்தரமூர்த்தி. ★

## விஷ நாக்கு அது....

★ 4-ம் பக்கத் தொடர்ச்சி

பெற்ற மகளேயே கூடும் 'மாபாபி' பிரமதேவன்!

எந்த அழகியின் கணவன். கண்ணே மூடுவான் என எதிர்பார்த்துக் கொண்டு திரியும்தேவர் கோன்!

வெறி கிளம்பி விட்டால் மிருகங்களைக் கூட இச்சை தீர்த்துக் கொள்ளும் கடவுளர் கூட்டம்!

தாய், தாரம், தமக்கை, என்ற வேறுபாட்டை மறந்து, காம வெறி கொண்டலைந்த முனிபுங்கவர்கள்!

கொலை, கொள்ளை, கொடுமை, விபசாரம், ஆபாசம்' இதைத்தவிர ஆச்சாரியார் கூறும் புராணங்கள் கற்பித்த பண்பாடுகள் என்ன? ஒழுக்க நெறி யாது? இந்த புராணங்களை பின்பற்றி 'அறிவொளி' பெற்ற புனிதர்கள் எத்தனை பேர்!

'பாரதம்' காட்டிய 'சிரிய' பண்பாட்டால் மனம் மாறி, வழிமாறி, புனிதத் தன்மை பெற்ற பெண்ணரசிகள் எத்தனைபேர்!

இராம சாதையால் நல்லவர்களானோர், எவ்வளவு!

'பஸ்சுல்லா ரோடு' முனிவரால் இதற்கெல்லாம் பதில் கூற முடியுமா? துணிவுண்டா?

செடிகளுக்கு மத்தியிலே ஆடுகள்!

ஆஸ்திகத்திற்கு இடையிலே நாஸ்திகர்கள்! எப்படியிருக்கிறது உவமை!

'அவனன்றி ஓரணுவும் அசையாது' என்ற நம்பிக்கை கொண்டவர் தானே ஆச்சாரியார்! அவர் பாணியிலேயே இதற்கு பதில் கூறுவதென்றால்–

செடிகளும் அவன்படைப்பு!

செடி தின்னும் ஆடுகளும் அவன் படைப்பு!

ஆஸ்திகர்களும் அவன் படைப்பு!

இலைகளைத் தின்றுதான் உயிர் வாழ வேண்டுமென்ற நிலை ஆடுகளுக்கு!

அதைப் போலவே, ஆஸ்திகத்தை அழித்துதான்—அறிவொளி பெற முடியுமென்ற நிலை நாஸ்திகர்களுக்கு!

ஆச்சாரியார் கொடுத்திருக்கும் உவமைப்படி நாஸ்திகர்களின் நிலை அது! ஒப்புக் கொள்வாரா இந்த சென்னை வாழ் 'சாணக்கியர்'

எனவேதான் நாம் கூறுகிறோம், 'ஆஸ்திகம்' இலையுமல்ல! நாஸ்திகம் ஆடுமல்ல!

நாஸ்திகம் — அடிவானத்து இளம்பரிதி!

ஆஸ்திகம்–விலக்கப்பட வேண்டிய காரிருள்! நாம் மட்டுமல்ல– அறிவுடையோர் அனைவரும் இதனை ஏற்பர்!

'நெடுங்காலமாகப்பலர் கூறிவருகிறார்கள் அதனால் சாஸ்திர சம்ரதாயங்களை ஒப்புக் கொள்ள வேண்டும்' என்பது ஆச்சாரியாரின் வாதம்!

பலர் சொல்லுகிறார்கள். பெரும்பாலானவர்கள் நம்புகிறார்கள் என்பதாலேயே ஒரு விஷயம் உண்மையாகி விட முடியாது!

விஞ்ஞான அறிவு வளருவதற்கு முன்பெல்லாம், உலகம் தட்டை என்பதுதான் பெரும்பாலானவர்களின் நம்பிக்கை!

அதனாலேயே உலகம் தட்டை என்பது உண்மையாகி விட்டதா?

'பெரியவர்கள் சொன்னதெல்லாம் அவிவேகமாகாது' என்று தன்னையும 'பெரியவர்கள்' பட்டியலிலே சேர்த்துக் கொண்டு பேசி இருக்கிறார் ஆச்சாரியார்;

பெரியவர்கள்–நம்புவதெல்லாம் சொல்லுவதெல்லாம் — விவேகம் என்று ஒப்புக் கொண்டால் 'உலகம் தட்டை' என்ற பொய்யையும், உண்மை என்றும்-விவேகம் என்றும் ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும்! இதை எப்படி நாம் அறிவுடமை என்று ஏற்றுக் கொள்வது?

'நாமே எல்லாவற்றையும் அறிந்துணர முடியுமென்ற நம்பிக்கை முட்டாள் தனமானது' என்கிறார்.

அப்படியானால் நம்மால் ஆவது ஒன்றுமில்லை பராபரமே என்று 'பாரத்தை' 'அவன்'மேல் போட்டுவிட்டு ஆமைபோல் அடங்கிக் கிடப்பதும் முட்டாள் தனம் தானே!

'மூட நம்பிக்கையால் மனிதர்கள் மூடர்களாகி விடுவதில்லை' என்று பேசும் இவர், நாஸ்திக பிரசாரத்தாலும் மனிதர்கள் நாஸ்திகர்களாகி விட முடியாது என்று நினைத்துக் கொண்டு 'குழந்தைகளா—கதை ஒன்று சொல்லுகிறேன்' என்று கூறியபடி கீழ்ப்பாக்கத்தோடு நின்றிருக்கலாமே! விஞ்ஞானிகள் பழையனவற்றைத் தள்ளி விடுவதில்லையாம்!

பழமைகளைத் தள்ளி விடாமல் பர்ணசாலைகளில் உட்கார்ந்தபடி 'ஏடும்—எழுத்தாணியும் கொண்டுவா சீடனே! எங்கே அந்த நாரீமணி!' என்று கூறிக் கொண்டா வாழ்கின்றனர் விஞ்ஞானிகள்!

'கும்ப மேளா' கொலுவிற்கா தலைமை வகித்தார் ஈன்ஸ்டீன்!

இவரைப்போல பஜனைப் பாடல்களை ஜபித்துக் கொண்டா உழலுகிறார் சி. வி. ராமன்!

'சாஸ்திர சம்பிரதாய அணையை உடைத்து விடாதீர்கள்' என்று அழுகுரல் எழுப்புகிறார். உடைத்து தகர்க்கின்ற அளவிற்கு அவ்வளவு பலவீனமுடையதா—அந்த நெடுங்காலத்து, 'ஆஸ்திக' அணை! அந்தோ! அனுதாபப் படுகிறோம்!

★

## நவீன நளமகா...

★ 1-ம் பக்கத் தொடர்ச்சி

பேறு பெற்ற மடஅன்ன நடையிலொரு சின்ன நடை பயிலும் தமயந்தி மானை எப்படித்தான் அந்தத் தடியன் தனியாக விட்டுச் சென்றானோ—என்று படிப்போர் மனதில் இரக்கம் எழுப்பிடச் செய்யும் புராணக் கதை நாம் படித்ததுதான்!

தேஷ்முக்கின் ராஜிநாமா கூட இந்த தமயந்தி கதையைத்தான் நினைவு படுத்துகிறது!

பதவி மங்கை மட்டு மென்ன அழகில்-நெஞ்சையள்ளும் வாலிபச் செறுக்கில்—தமயந்திக்கும் தோற்றவளா?

தன, தான்யங்கள் மலைமலையாய்க் குவிந்திருந்தும் கூட ராமசாமிப் படையாச்சிகள்—மாணிக்கவேலர்கள் அந்த சுந்தர வல்லியைத் தேடித்தானே நிதானமிழந்து ஓடிக் கொண்டிருக்கின்றனர்!

இந்த நிலையில் தேஷ்முக் மராட்டியனென்னும் மான உணர்ச்சி பெற்று கடமையாற்றத் துவங்கியிருப்பது கவரிமான் அனையோருக்குக் களிப்புதரும் செய்தியாகும்!

—இறுதி வரையில் அவர் இந்த மன நிலையிலிருப்பாரோ; அல்லது இடையிலே 'கிருஷ்ணமாச்சாரி' வேடம் தாங்கி ராஜிநாமாவை வாபஸ் பெறுவாரோ; இரண்டுமின்றி நான் ராஜிநாமாச் செய்வதாக வந்த செய்தியே தவறு என்று இதோபதேசம் புரிவாரோ—என்பது இனி நாம் பொறுத்திருந்து கவனிக்க வேண்டிய நிகழ்ச்சியாகும்!

ஆனால் அதே நேரத்தில் யூனியன் சட்ட விவகார மந்திரி, எச். வி. படாஸ்கர் என்னும் மராட்டியரோ என்ன கேடு வந்தாலும் நான் பதவியை விட மாட்டேன் என்று கூறி 'ஆச்சாரியாராகி' விட்டார்!

தேஷ்முக்—

படாஸ்கர்—

—மராட்டிய மண்டலத்திலேயே இரு வேறு துருவ முனைகள்!

ஒரு தேஷ்முக்கிற்கும், பதவியை உதறித் தள்ளிய ஹிரே—சாவன் போனறோருக்கும் உள்ள மொழியுணர்ச்சியில் ஊசி முனையளவு கூட இந்த மாநிலத்து அமைச்சர்களுக்கில்லை!

தமிழர் வாழும் பகுதிகளாம், தேவி குளமும், பீர்மேடும் நம்மை விட்டுப் போய் விட்டன!

டில்லி செங்கோட்டையில் வாழும் ஆணவ உள்ளத்தினர் நாஞ்சிற் பகுதியிலே உள்ள நம் செங்கோட்டையைச் சிதறடித்து விட்டனர்!

—இந்த அநீதியைக் கண்டு பச்சைத் தமிழ் நெஞ்சம் படைத்தவரென்று கூறப்படும் காமராசரின் மனம் பதை பதைக்கவில்லை!

மந்திரி சுப்பிரமணியம், ராஜிநாமா செய்து விட்டால் போன பகுதிகள் திரும்பி விடுமா? என்று கேட்டு அரிச்சுவடி படிக்கும் மாணவன் செய்கின்ற ஆராய்ச்சிகளிலே ஈடுபட்டிருக்கிறார்!

## பெரிய இடத்துப் பெண்கள்....

★ 5-ம் பக்கத் தொடர்ச்சி

கொடுக்கிறவரையில் நான் இந்தத் துறையிலேயே பணியாற்ற விரும்புகிறேன் என்று!

"என்னுடைய கணவர் தன்னுடைய பணிகளை முடித்துவிட்டுத் தாமதமாகத்தான் வீடு திரும்புகிறார். அதுவரை எனக்குத் தனியாக இருக்கப் பிடிக்கவில்லை. அது தவிர, நான் ஒரு அணுவளவாவது நாட்டுக்குப் பயன்பட வேண்டாமா?" — இதுபோன்று அவர் கேள்வி கேட்கிறார். இந்திரா, காமினி போன்றோரைப் பார்த்து அல்ல —தன்னைக் கேள்வி கேட்ட பத்திரிகை நிருபரிடம்!

புல்கானினுக்கு முப்பது வயதுடைய மகனுண்டு. அவர் ஒரு இஞ்சினீயர்! அந்தத் துறையிலே அவர் தாயகத்துக்குப் பணி செய்து வருகிறார்!

ஒரு மகளுண்டு — இருபத்திரண்டு வயதில்! அவர் வைத்தியக் கல்லூரியில் பயின்று வருகிறாராம், அப்பாவோடு 'திக்விஜயம்' செய்யாமல்!

புல்கானினோடு அவரது மனைவியோ, புதல்வியோ வராததன் மர்மம் இதுதான்!

ஒருவர் பல்டியடித்தோ, பாதகச் செயல் புரிந்தோ பதவி தேடி விட்டால் பின்பு அவரது குடும்பமே குனியாமல், நிமிராமல் குள்ளநரி வாழ்க்கை நடத்துகிறது இங்கே!

அங்கோ அகிலத்தையே வளைக்கும் திறன் வாய்ந்தோரின் இல்லத்தார் சாதாரண உழைப்பாளிகளைப் போல வாழ்வு நடத்துகின்றனர்!

புல்கானின் விஜயம் இந்தப் பேதத்தை உணர்த்தி, இந்த நாட்டுப் பேதையரைப் பிடித்திருக்கும் பெரும் பிணியைப் போக்கட்டும்!

★

பக்தவத்சலனாரோ பச்சைத் துரோகியாக வடிவ மெடுத்து விட்டார்!

ஒரிஸ்ஸா மாநிலத்து முதலமைச்சர் மனைவி திருமதி சௌத்ரிக்கு உள்ள சுயமரியாதை உணர்வுகூட, பொதுமக்கள் மத்தியிலே செல்லாக்காசாகி வரும் இந்தக் கனவானுக்கு இல்லை!

வறுமை வாட்டிய போதும், தன்மானம் தேளெனக் கொட்டிய போதும் பதவி தமயந்தியின் பாதம் வருடுவதிலே பரவசம் பெறும் நவீன நளமகராஜர்களாகி விட்டார்கள், நம்மாநிலத்து அமைச்சர்கள்!

ஜனநாயக நெறி தவறியோருக்குத் தண்டனை வழங்க ஓட்டுரிமை என்னும் சவுக்கு பெற்றிருக்கும் பொது மக்களே! தமிழர் தம் உணர்வு தாழ்ந்து, தாழ்ந்து-தாழ்ந்த நாயினும் தாழ்ந்து போயிருப்பதை எண்ணிப் பாருங்கள்! அடுத்த தேர்தலுக்கு இன்று தூய்மை வேஷம் போடும் இந்தப் பொல்லாதவர்கள் வருவார்கள். நிச்சயம் அவர்களைச் சரியான முறையில் கவனித்துக் கொள்ளத் தவறாதீர்கள்! ★

## ஒரே வாக்கியம்!

'வில்லியம் பாக்னர்' என்பவர் நோபல் பரிசுபெற்ற தலைசிறந்த நாவலாசிரியர். அவர் எழுத்துக்களை யாரும் சுலபமாக படித்துப் புரிந்துகொள்ள முடியாது. அவர் எழுதிய நாவல் ஒன்றில் ஒரே ஒரு வாக்கியம், கோலன், சமா, செமிகோலன், இவற்றின் துணை கொண்டு முட்பத்தி ஏழுரை பக்கங்கள் ஓடுகின்றன! ஆம்! ஒரே ஒரு வாக்கியம்தான்!

அலுவலகத்திற்கு வந்திருந்த பொங்கல் வாழ்த்துகளைப் புரட்டிக் கொண்டிருந்தேன். எத்தனை வகையான வண்ணக் காகிதங்கள்; கருத்து வரிகள்! ஒரே வியப்பாக இருந்தது. எங்கெங்கோ சிதறிக் கிடக்கும் தங்கத் தங்கைகள்— எத்தனை ஆண்டுகளாகவோ சந்திக்காமலிருக்கும் சிங்கத் தம்பிகள்— அத்தனை பேரும் வாழ்த்திக் கொள்ளும் பண்புதான் என்ன? அதற்கு வழி வகுக்கும் பொங்கல் விழாதான் எத்தனை சிறப்புடையது?—என எண்ணினேன். எனக்கு ஒரே மகிழ்ச்சி!

ஆனால், அந்த மகிழ்ச்சி அதிக நேரம் நீடிக்கவில்லை. காகிதக் குப்பைகளுக்கு மத்தியிலே தலையை நீட்டிய ஒரு நீல நிற கடித உறையை எடுத்தேன். அடுத்த கணம் மகிழ்ச்சி மறைந்தே ஓடியது. அதை ஏன் எடுத்தேன்— ஏன் பிரித்தேன் —உள்ளே இருந்த கடிதத்தை ஏன் தான் படித்தேனே — என்று என்னையே நொந்துகொள்ளும் அளவுக்கு வேதனை வந்தது.

அந்த எழுத்துக்கள்...? நான் அடிக்கடி பார்த்தவை; படித்தவை! சற்று யோசித்தேன். அப்புறம் புரிந்துகொண்டேன். அந்த எழுத்துக்கள் எங்களூர் தம்பி ஒருவனுடையவை. அவன் பெயர்கூட... குமரன் என்பது. இதைப் புரிந்து கொண்டவுடனேயே என் மனம் எங்கேயோ ஓடியது. கண நேரத்தில் அவனை என் கண் முன் கொண்டுவந்து நிறுத்தியது. பாவம், ஏழை அவன்! அப்பாவை பிறந்தவுடனேயே இழந்தவன்; அம்மாவின் தயவில் பிழைத்து வந்தவன். கிழிந்த உடையுடன், அழுக்கடைந்த புத்தகப் பையுடன், முழங்கால் உயரம் மண் படிந்திருக்க, புழுதி மண்ணிலே அவன் வேக வேகமாக நடந்து பள்ளிக்கூடம் செல்லும் காட்சி...அப்பப்பா! அப்போது நினைத்தாலும் எனக்கு வேதனையாக இருந்தது. "அண்ணு; அண்ணு" என்று அவன் மற்றவர்களை அன்பொழுக அழைக்கும் ஆசைக்குரல்...எனக்கு வியப்பு அதிகரித்தது. அவன் ஏன் இப்போது கடிதம் எழுத வேண்டும்?... அவசர அவசரமாகக் கடிதத்தைப் பிரித்தேன்...படித்தேன்:

"அன்புள்ள அண்ணு!

நீண்ட நாட்களுக்குப் பிறகு— இல்லை; இல்லை — ஆண்டுகளுக்குப் பிறகு உங்களுக்கு மிகவும் பிடித்தமான தம்பி கடிதம் எழுதுகிறேன். 'குமரனு? பாவம், ஏழை அல்லவா அவன்! உணவுக்கே திண்டாடுபவனயிற்றே! ஏதேனும் உதவி கேட்டு —பள்ளிக்கு சம்பளம் கட்ட பணம் கேட்டு கடிதம் எழுதியிருப்பான்' என்று நினைத்து விடாதீர்கள். குமரன் ஏழையல்ல இப்போது— அண்ணு, இந்த அதிர்ச்சியைத் தாங்க தயாராகிக் கொள்ளுங்கள். பள்ளிக்கூடம் செல்லும்போதெல்லாம் நடைபாதை ஓரத்திலே எனக்கு பகுத்தறிவு உபதேசம் செய்வீர்களே — அதெல்லாம் பாழ்தானு என்று எண்ணி ஏங்காதீர்கள். நான் சிறுவன்தான். சிங்கத் தம்பிதான். ஆனல் இந்த சிங்கம் தான் வஞ்சக வலையிலே சிக்கி விட்டதண்ணு! இப்போது நான் சாதாரண எலி; இல்லை; எறும்பு!

இந்தக் குமரனைப் பற்றி நீங்கள் பத்திரிகைகளில் படித்து வருவீர்களே! ஏன் வியக்கிறீர்கள்? என்னைப் பற்றி கதை கதையாக— பத்தி பத்தியாக—பரபரப்புடன் — கொட்டை எழுத்துக்களில் பத்திரிகைகளில் செய்திகள் வரத்தான் செய்கிறது. கண்டிப்பாக வரும் — இன்று மட்டுமல்ல; இனியும் மூட மதி கொண்டவர்கள் நம்மிடையே இருக்கும்வரை வந்துகொண்டேதான் இருக்கும். அதுமட்டுமா அண்ணு! புழுதி மண்ணில் புரண்டு கொண்டிருந்தேனே; அன்று என்னை யார் கவனித்தார்கள்; ஆனல் இன்று எனக்குக் கிடைத்திருக்கும் வாழ்வு எத்தகையது தெரியுமா? அன்று என்னை ஏறெடுத்துப் பார்ப்பார் யாருமே இல்லை; ஆனல் இன்றோ...என் கை விரல் அசைவை — உதட்டசைவை எதிர்நோக்கி— ஏங்கித் தவித்து அணிவகுத்து நிற்கிறதண்ணு ஒரு மாபெரும் கூட்டம். அண்ணு, இனியும் உங்கள் பொறுமையை சோதிக்க நான் விரும்பவில்லை. நான் இப்போது யார் தெரியுமா? சாதாரண குமரனல்ல; குமரபாபா! புரிகிறதா?......"

திடீரென்று படிப்பதை நிறுத்தினேன். "குமரபாபா"......நான் மின்சாரத்தால் தாக்குண்ட நிலையை அடைந்தேன். குமரபாபாவைப் பற்றி பத்திரிகைகள் எழுதி வருவதை நான் தொடர்ந்து படிப்பவனயிற்றே! "ஆண்டவனின் வாரிசு குமரபாபா"— "தீராத நோயெல்லாம் தீர்த்து வைக்கும் குமரபாபா" —"பனிரெண்டு வயது பாலகனுக பகவான் அவதாரம்"— இப்படியெல்லாம் தலைப்புகள்! இவை மட்டுமா செய்தி? எட்டுக்குடி என்ற கிராமத்தில் ஒரு மணற்குன்றுதான் குமரபாபாவின் இருப்




பிடம். எத்தகைய கொடிய-புதிய-பெரிய வியாதியானுலும் கைதூக்கி ஆசீர்வதித்து, விபூதியும் தந்தால், மறுகணம் 'பட், படார்' அவ்வளவு தான்; வியாதி பறந்தே விடுகிறது— தினம் தினம் லட்சக் கணக்கான மக்கள் திரள். இப்படியும் செய்திகள்! இத்தகைய வியப்பையும் பரபரப்பையும் உண்டாக்கி விட்ட குமரபாபா யார்? அந்த 'ஆண்டவன் அவதாரம்' யார்? எங்கள் ஊர் தம்பி குமரன்! இதை அறிந்ததும் எனக்கு என்ன செய்வதென்றே புரியவில்லை. படபடப்புடன் மேலும் படித்தேன்.

"...ஆமாம் அண்ணு! குமர பாபா நான்தான்—உங்கள் தம்பி குமரனே தான்! நான் எப்படி இப்படியானேன்? படியுங்கள்: எனக்கு ஒரே துணையாக இருந்த அம்மாவும் — என்ன நடந்திருக்கும் என்று நினைக்கிறீர்கள்?— ஏழைகளுக்கே உரித்தான காலராவுக்கு பலியாகி விட்டார்கள். என்ன செய்வேன் நான்? தெருப் பையன்களில் ஒருவனுனேன். அப்போதுதான் என் அம்மாவைக் கொல்ல காலரா வந்தது போல், என்னையும் உயிருடன் கொன்றுடோட அந்த சாமியார் வந்து சேர்ந்தான். ஒருநாள்; வீதி வழியே சென்று கொண்டிருந்தேன். 'தம்பீ' என்றொரு குரல் கேட்டது. திரும்பிப பார்த்தேன். திடுக்கிட்டேன். பயந்தேன். காவி உடையும் கமண்டலமும் கழுத்திலே எலும்பு மாலையும் அணிந்த ஒரு பயங்கரமான சாமியார் என்னை அழைத்தான். நடுங்கியபடியே சென்றேன்: என்னை வாரி அணைத்துக் கொண்டான். 'அடடா! என் கண்ணே! உன்னைத்தான் தேடிக்கொண்டிருக்கிறேன் ஆண்டாண்டு காலமாக! நீ சாதாரண சிறுவன் அல்ல; ஆண்டவன் அவதாரம்! ஆண்டவன் அவதாரம்!! ஹா...ஹா...' என்று பயங்கரமாகச் சிரித்தான். என்னை அவனுடன் அழைத்தான். நான் மறுத்தேன். ஆனல், மறு கணம் அவன் கண்கள் கோவைப் பழம்போல் சிவந்தன. இடையிலிருந்து எதையோ எடுத்தான். நான் 'ஐயோ' என்று அலறிவிட்டேன். அலருமல் என்ன செய்வது? அந்தக் கூரிய கத்தி என்னை அலற மட்டும் செய்ப வில்லை; அவனுடன் கூடவே நடக்கவும் வைத்தது.

அப்புறமென்ன? எட்டுக்குடி வந்தோம். மொட்டைத் தலை — இடையில் சிறு துண்டு—உடம்பு முழுதும் சாம்பல்— இப்படி எனக்கு உருவம் தந்தான்! நான் சென்ற பத்து தினங்களாக குமர பாபாவாக வாழ்கிறேன். மக்கள் திரள் திரளாகக் கூடுகிறுர்கள். மூச்சுத் திணரும்படி என் தலையிலே பால் குடங்களை சாய்க்கிருர்கள். மலர் கொத்துகளைத் தூவுகிருர்கள். கை கூப்பித் தொழுகிருர்கள். ஆனல் என்வேலை என்ன தெரியுமா? வந்தவர் யாரானுலும் சற்று நேரம் ஏதோ முணுமுணுப்பதுபோல் நடிக்க வேண்டும் —பின் ஆசீர்வதிக்க வேண்டும்—விபூதி தர வேண்டும்! ஆனல் காணிக்கையோ ஆயிரமாயிரமாகக் குவிகிறது, என்னை ஆண்டவனுக்கினனே— அந்த அற்பனிடம்!

ஐயோ; முட்டாள் கூட்டமே! நான் என்ன அண்ணு செய்வது? எழுந்து ஓடவும் முடியவில்லை. பக்தர் படை எப்போதும் இருக்கிறது. அதுமட்டுமல்ல; அந்த பயங்கர சாமியார் என் பக்கத்திலேயே நிற்கிருன். கொஞ்சம் முகத்தை சுளித்தால் இடையிலே கை வைத்துக் கத்தியைக் காட்டுகிருன். நான் அழுவதா? சிரிப்பதா? அறிவையும் பணத்தையும் இழக்கும் மக்களையும், அதை அபகரித்துக் கொள்ளும் சாமியாரையும் நினைத்து நினைத்து மாய்கிறேன்.

இக் கடிதம் எழுதும் நேரமோ நள்ளிரவு — அந்த திருட்டுச் சாமியார் சற்று கண்ணயர்ந்திருக்கிருன். அவசர அவசரமாக, என்னைக்காவல் காக்க வந்திருக்கும் ஒரு சிறுவனிடம் கெஞ்சிக் கெஞ்சி பேனு, பேப்பர் வாங்கி இக் கடிதம் எழுதுகிறேன்.

நான் இனி ஏய்த்து வாழ மாட்டேன் — மற்ருேரை அறிவிலிகளாகவும் ஆக்கமாட்டேன்! மாட்டேன்! எனக்கு என்ன வழி? எனக்கு வேண்டுவது விடுதலை! விடுதலை!! விடுதலை!!!"

கடிதம் முடிந்தது. நான் அவசர அவசரமாக எட்டுக்குடிக்குப் புறப்பட்டேன்.

★

எட்டுக்குடி கிராமமா அது? எங்கும் வண்டிகள்—மக்கள் கூட்டம்— குமரபாபாவைப் பற்றியே பேச்சு!

"அடடா! அந்த முகத்திலே தான் என்ன தேஜஸ்! என்ன ஒளி! ஆண்டவன் அவதாரம் என்று சொல்லாமல் சொல்லுகிறதே! அதுவும் இன்று புதிதாக பாம்பு ஒன்றுமேனி எல்லாம் இழைகிறது'—இப்படி ஒரு பக்தர்.

'அந்த நல்ல பாம்பே எங்கிருந்தோ இன்றுதான் வந்ததாம்! பின்னே என்ன? பரமசிவன்தானே இந்தப் பாலகன் ரூபத்திலே வந்திருக்கிருர்! பாம்பும் முறைப்படி வந்து விட்டது'— இது மற்ருெருவர்.

நான் கூட்டத்தில் புகுந்து வேகமாக நடந்தேன். குமரபாபா, முரட்டுச் சாமியார் எல்லோரையும் பார்த்து விட்டேன். குமரபாபா— அவன் குமாரனேதான்! எனக்குக் "குமரா" என்று கத்த வேண்டும் போல் இருந்தது. பேசாமல் கூட்டத்தில் இடிபட்டு அவனை நெருங்கினேன். அப்பப்பா! அவன் கண்களில்தான் எத்தனை ஏக்கம்!— விடுதலை வெறி! ஆனல், ஐயையோ! அவன் உடலைச் சுற்றி படமெடுத்து ஆடிக் கொண்டிருந்தது ஒரு நல்ல பாம்பு! நான் பயந்து விட்டேன். அதோ, அவன் என்னைப் பார்த்து விட்டான்! மறுகணம் அவன் கண்கள் விரிந்தன. முகம் 'பளிச்'சென்று மாறியது. வெறி பிடித்தவனைப்போல் 'குபுக்'கென்று எழுந்தான். ஆனல் மறுகணம் படமெடுத்து ஆடிக் கொண்டிருந்த நாகம் மிரண்டது. கழுத்தைத் தூக்கியது. அவன் என்னை நோக்கி ஓடி வரத் தொடங்கினன். நாகமோ அவன் கன்னத்திலே கொத்தியது! "ஐயோ" என்று அலறினன் குமரன் —கீழே சாய்ந்தான்!

மறுகணம் ஒரே பரபரப்பு—கூச்சல்! நான் "குமரா" என்று அலறிக் கொண்டே ஓடினேன். ஆனல் கூட்டமோ என்னை முன்னேறவிடவில்லை; வெளியே தள்ளிக்கொண்டு வந்து தள்ளியது! நான் தடுமாறினேன். கீழே சாய்ந்தேன். என்னை மிதித்தபடியே பலர் ஓடினுர்கள். நான் மயக்க முற்றேன்.

மீண்டும் நான் கண் விழித்த போது நன்ருகஇருட்டிவிட்டிருந்தது. "குமரா" என்று அலறினேன்.

"என்ன?" என்று கேட்டுக் கொண்டேவந்தார் ஒருவர்.

"குமார பாபா..." என்று இழுத்தேன்!

"அடடா! ஒருநாள் முன்னல் வந்திருக்கக் கூடாதா? ஆண்டவன் அவதாரம் எடுத்ததே பத்து நாட்களுக்குத்தானும்! இன்று மாலைதான் மறைந்து போனுர். ஐயோ, பாவம்! நீ கொடுத்து வைத்தது அவ்வளவு தான்!" என்ருர். என் கண்கள் கலங்கின. தூரத்தில் கவனித்தேன். மணற்குன்றில் தீபம் எரிந்தது. தீபத்தை வலம் வந்தனர் பக்தர்கள். நான் திரும்பி நடந்தேன்.

ஆயிரமாயிரமாக காணிக்கை பெற்ற கள்ளச் சாமியார் பணத்துடன் மறைந்து போனுர். வீணனின் கையிலே சிக்கி 'விடுதலை'க்குத் துடித்த குமரனும் நிரந்தர விடுதலை பெற்று விட்டான். ஆனல் குமரபாபாவுக்கோ இப்போது கோயில் கட்டுகிருர்கள். 'கும்பாபிஷேக'மும் நடத்தப் போகிருர்களாம்.

—சொர்ணப்

# கடைசிப்பக்கம்
## எழுத்தாணி

இந்த வாரம் பரிசு பெறும்
தோழர் :
(●) பி. வி. ராசன்,
வேதாரண்யம்.
(தஞ்சை மாவட்டம்)

மா. இளங்கோ; குத்துக்கல் வலசை.

(?) நேருவுக்கு ஒரு வால் முளைத்திருந்தால்...?

ரஷ்யாவுக்குப் போகவும், ஆசிய நாடுகளுக்கு அடிக்கடி விஜயம் செய்யவும் அவர் ஆகாய விமானத்தின் துணையை நாட மாட்டார் !

(?) எல்லாம் ஈசன் செயல்—என்று கொண்டால், கற்பு நெறி தவறுவதும், கொலை, களவு செய்வதும் ஈசன் செயல்தானே?

ஆமாம் ; ஈசன் செய்து காட்டிய செயல்கள்தான் !

கோ. பக்கிரிசாமி; தோழந்தூர்.

(?) ஓய், எழுத்தாணியாரே! சென்னைக்கும் இன்பபுரிக்கும் எத்தனை மைல்கள்?

சென்னைக்கும், கவர்னர்-பிரான் வாழும் கிண்டிக்கும்-தானே? சுமார் பத்து மைல்களுக்கு மேல் இருக்கும்!

### திருத்தம்

4-12-55 அன்று வேலூரில் நடைபெற்ற மாநில மாநாட்டு நிதியளிப்புக் கூட்டத்தில்-நிதிக்காக ரூ. 150 தரப்பட்டது என்று 23-12-55 இதழில் வெளிவந்திருப்பதை ரூ. 200 என்று திருத்திக் கொள்ளவும்.


வெளி வந்துவிட்டது !

புதுவாழ்வு அளிக்கும்
வெளியீடு!

புதுமை மணம் கமழும்
மலர்க்காடு!

இதயம் களிக்கச் செய்யும்
தேன் கூடு!

நே. ஜி. இராதாமணாளன்
இயற்றிய-கற்பனைச் சித்திரம்

வீணை

கருத்திற் கேற்ற காதல்
ஓவியம்!

கரும்பினும் இனிய
செந்தமிழ்க் காவியம்!

மூவண்ண முகப்பு! —
— அழகிய பதிப்பு!

விலை ரூ. 2—8—0

கிடைக்குமிடம்:
பாரி நிலையம்
59-பிராட்வே சென்னை-1


அ. செல்லப்பா; முளகுமூடு.

(?) இப்போதைய சென்னை மாநிலத்துக்கு தமிழ்நாடு என்று பெயர் வைக்கத் தமிழர்களால் ஒரு போராட்டம் துவங்கப்படுமானால் 'கல்லக்குடி சோறு போடுமா?' என்று கேட்டவர்கள் என்ன செய்வார்கள்?

போதத் தேர்தல் நெருங்கி வருவதால் அவர்கள் இப்போது பசியைப் பற்றி அவ்வளவாக அக்கரை காட்ட மாட்டார்கள்!

(●)பி.வி.ராசன்; வேதாரண்யம்.

(?) ஓய் எழுத்தாணியாரே! உங்கள் கட்சி போராட்டமென்னும் எலிகளைப்பிடிக்கும் பொறியாமே?

ஆமாம்; எலிப்பொறி எலிகளைத் துரத்தாது-அது போலவே நாங்களும் போராட்டங்களைத் தேடி அலையமாட்டோம்!

வேதமுனி; கோழிக்கோடு

(?) காங்கிரஸ் கட்சி இப்போதெல்லாம் நாட்டு மக்களிடையே மதிப்பிழந்து வருவானேன்?

சாமான் வாங்குவோருக்கு ஒன்று கடைமேலாவது நம்பிக்கையிருக்க வேண்டும்; அல்லது வாங்குகிற சரக்கின் மீதாவது நம்பிக்கையிருக்க வேண்டும்—இரண்டுமில்லாதபோது மதிப்பிழக்க வேண்டியதுதானே!

காமாட்சி; திருநெல்வேலி.

[?] 1947, ஆகஸ்ட் 15-க்கு முன்பு நடந்த துப்பாக்கிப் பிரயோகங்களுக்கும், இப்போது நடப்பவைகளுக்கும் என்ன வித்தியாசம்?

அப்போது அன்னியர்கள் 'நரசிம்ம அவதாரம்' எடுத்தார்கள்; இப்போது 'நம்மவர்களே' நம்மைச் சுட்டுக் கொல்லுகிறார்கள்!

க. சிலம்பன்; அள்ளாளபுரம்.

[?] சம்சாரம் பெரிதா? சன்யாசம் பெரிதா?

சன்யாசம்தான் பெரிது—சோம்பேறிகளுக்கு!

மோகன்தாஸ்; கோவை.

(?) நல்ல காலம் என்பது எப்போது வரும்?

கண்ணில்லாதவனுக்கு இரங்குவதைப் போல, அறிவில்லாதவனுக்கும் பிறர் இரங்கும் போது!

நல்லகண்ணு; கும்பகோணம்.

(?) மொழியுணர்ச்சியைப் புதைகுழியில் தள்ளும் நேரு இப்போது என்ன செய்து கொண்டிருக்கிறார்?

கரையை அடைவதாகஎண்ணிக் கொண்டு அவர் தோணிக்குள்ளேயே ஓடிக்கொண்டிருக்கிறார்!

கே.சி.ராமு; செவ்வாய்ப்பேட்டை.

(?) கண்களுக்கும் பசியுண்டா?

இல்லாமலென்ன; அவைகளும் காங்கிரஸ் கட்சியிலா சேர்ந்துவிட்டன?

செல்வமணி; புதுக்கோட்டை.

(?) வீராதிவீரர் டாக்டர் லோகியோவைப் பற்றி என்ன நினைக்கிறீர்?

அவர் ஒரு முதலை — ஆனுலும் தண்ணீருக்கு வெளியே இருப்பவர்!

## கொள்கை வளர்த்த கோபுரம் போலே!

**பள்ளிப்பாளையம்**
28—1—56
சனிக்கிழமை மாலை 6-மணிக்கு
தோழர் சி. பி. சிற்றரசு
பேசுவார்.

**அண்ணாமலை நகர்**
28—1—56 அன்று
தோழர் என். வி. நடராசன்
தோழர் கே. ஏ. மதியழகன்
ஆகியோர் பேசுவார்கள்.

**போளூர்**
30—1—56
தோழர் கே. ஏ. மதியழகன்
பேசுவார்.

**பாப்பாரப்பட்டி**
30—1—56
மாலை 6—மணியளவில்
தி. மு. க. சார்பில்
தோழர் சி. பி, சிற்றரசு
ப. உ. சண்முகம்
பேசுவார்கள்

**விளாப்பாக்கம் (வ. ஆ.)**
28—1—56
மாலை 6—மணி அளவில்
தி. மு. க. ஆண்டு விழாவில்
தோழர் ஏ. கே. வில்வம்
தோழியர் அருண்மொழி
பேசுவார்கள்.

ஆர். கோவிந்தசாமி; விழுப்புரம்.

(?) மயிர்க் கூச்செறியும் பேச்சை எங்கு கேட்க முடியாது?


வழக்கைத் தலைக்காரர்கள் நிரம்பிய இடத்தில்!

## எருமைக்கு முன்னே இன்னிசை !

வெறிபிடித்து ஓடி வரும் காட்டெருமை போன்றது இந்தி வெறி! அதற்கு முன்னே வீணையின் நாதம் என்ன பயன் தரும்? ஆச்சாரியார் இப்போது அந்த வேலையைத்தான் செய்து வருகிறார்!

'கல்கி' இதழில் இந்தி மொழி பொது மொழியாவதில் அவசரம் வேண்டாமென கீதை நடையில் உபதேசம் செய்வதன் மூலமே இந்த நாட்டில் வேற்று மொழிப் படையெடுப்பின் வேகத்தைத் தடுத்து விடலாமெனக் கனவு காணுகிறார் !

புலிக்கு முன் புன்னகவராளி ! எருமைக்கு முன் இன்னிசை !—எப்படி பயன்தர முடியும்?




[—சங்கர்ஸ் வீக்லி]

ஆசிரியரும், அச்சிடுபவரும், வெளியிடுபவரும் மு. கருணாநிதி, 'முரசொலி' அச்சகம், 4/128, மவுண்ட்ரோடு, சென்னை-6